# நம் வழி வேளாண்மை

பருவம் 33 | ஜனவரி – மார்ச் 2026 | இதழ் 4




1.01.2026 தேதி அன்று கன்னியாகுமரி கடற்கரையில் உலக மேய்ச்சல் நிலம் மற்றும் கிடைக்காரர்கள் ஆண்டு உறுதிமொழி எடுக்கப்பட்டது.

*இயற்கைவழி விவசாயிகள், மூலிகை வைத்தியர்கள் மற்றும் அடித்தள கண்டுபிடிப்பாளர்களின் குரலோசை*

# நம் வழி வேளாண்மை

பருவம் 33 ஜனவரி – மார்ச் 2026 இதழ் 4

ஆசிரியர்

**பெ. விவேகானந்தன்**


### நம் வழி வேளாண்மை தத்துவம்

தேனீக்கள் மலரை நாடிச் செல்கின்றன. மலருக்கு மலர் தாவி தேனை எடுக்கின்றன. தேனை எடுப்பதால் மலர் குறைபடுவதில்லை. மாறாக மலர் கருவுற்று காயாக, கனியாக துணை செய்கின்றன. தேனீக்களின் இந்த சேவையினால் மலரும் பயன் பெறுகின்றது. தனக்கும் பிறருக்கும் பயன்படும் தேனையும் சேகரித்து வைக்கின்றது. இந்த சேவை தத்துவத்தை பின்பற்றி நம்வழி வேளாண்மை ஒரு சிலரிடம் உள்ள உத்திகளையும் மற்றும் ஒரு பகுதியில் உள்ள பாரம்பரிய அறிவையும் எடுத்து வெளிக்கொணர்ந்து மற்றவர்களுக்கும் பிற பகுதிகளுக்கும் அறிமுகப்படுத்தி மேலும் பலரும் பயன் பெற வழி வகுக்கின்றது.


### நம்வழி வேளாண்மை குழுமம்
### பிற மொழி இதழ்கள்

ஆங்கிலம் – தேனீ (Honey Bee)
குஜராத்தி – லோக் சர்வானி
ஹிந்தி – சூஜ் புஜ் ஆஸ் பாஸ்கி
ஒரியா – அமா அகாபகா
தெலுங்கு – பல்லி ஸ்ருஜானா
கன்னடம் – ஹித்தலகிடா
மலையாளம் – இனிகர்ஷகான்சம்சாரிகட்டே



### நம் வழி வேளாண்மை

45, டி.பி.எம். நகர், –3 வது தெரு
விராட்டிபத்து, மதுரை – 625 016.
தொலைபேசி : 0452– 2380082, 9344523892.
இமெயில் vivekseva@gmail.com



### ஆங்கில இதழ் முகவரி

Prof. Anil Gupta,
**Honey Bee,**
SRISTI, AES Boys Hostel Campus,
Near Gujarat University Library & SBI Bank,
Navrangpura, Ahmedabad-380 009, Gujarat,
email: honeybee@sristi.org


## வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்

எங்கள் கிராமத்தில் சுமார் 100 வீடுகள் உள்ளன. இங்கு அளவில் பலதரப்பட்ட ஜாதி, சமூக மக்கள் சகோதரர்களாகவே மாமன், மச்சான்களாகவே உறவுமுறை பேசி வாழ்ந்து வருகிறோம். பஞ்சாயத்து தேர்தல் வந்தது எங்கள் கிராமத்தில் ஓர் உறுப்பினரைத் தேர்ந்து எடுக்க வேண்டும். பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட ஜாதியைத் தவிர வேறு யாரும் வர முடியாது. அந்த ஜாதி சமுதாயத்தை சேர்ந்தவர் ஊர் நாட்டாண்மையும், அதே சமூகத்தை சேர்ந்தவரே. எனவே, இதை மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. எனக்கு நஞ்சை நிலம் ஓர் ஏக்கர் இருந்தது. குளத்துப் பாசனம் சில நேரங்களில் குளத்துப் பாசனத்தை நம்பி நடும் நெற்பயிர் சமயத்தில் தண்ணீர் இன்றி வாடும். அப்பொழுது எங்கள் மேல் வயலில் உள்ள கேணியிலிருந்து ராமையா என்பவர் தண்ணீர் தந்து உதவுவார். பெருந்தன்மையான மனிதர். இலவச மின்சாரம், காசு வாங்கமாட்டார். தண்ணீரை விலைக்கு விற்பது பாவம் என நினைத்தனர். இருப்பினும் ஜாதி ஆதிக்கத்தை ஒழிக்க குறிப்பிட்ட ஜாதியிலிருந்தே ஒருவரை மற்ற ஜாதியினர் நிறுத்த முடிவு செய்தனர். கடுமையான போட்டி ராமையா 4 ஓட்டுகள் வித்தியாசத்தில் தோற்றுப்போனார். நான் சமூகத்தைச் சேர்ந்தவன். ராமையாக்கு எதிராக வேலை செய்தேன். இதற்கு இடையில் இந்த வருடம் குளத்தில் தண்ணீர் வற்றி விட்டது. எங்கள் வயலில் நெற்பயிர் வாட ஆரம்பித்தது. வழக்கம் போல் எனது வயலுக்குத் தண்ணீர் விடும்படி, ராமையாவிடம் கேட்க வாய்ப்பு இல்லை. தேர்தலில் அவருக்கு எதிராக வேலை செய்த நான் “எந்த முகத்தை வைத்துக் கொண்டு அவரிடம் போய் தண்ணீர் கேட்பது? பேசாமல் இருந்து விட்டேன். ஒரு நாள் காலை வயலுக்குச் சென்று கொண்டிருந்தேன். எதிரே வந்த ராமையா என்னைப் பார்த்து ” மாப்பிள்ளே உன் வயலுக்கு தண்ணீர் பாய்ச்சி விட்டேன் இன்னொரு தண்ணீர் விட்டால் விளைந்து விடும் என்று மிகவும் எதார்த்தமாகச் சொன்னார். “பயிர் வாடுவதை பார்க்க என்னால் சகிக்க முடியவில்லை என்றும் காரணம் கூறினார். என் முகத்தில் அசடு வழிந்தது. நெற்பயிர் வாடுவதை வெள்ளந்தியான ராமையா மனசு பொறுக்க முடியவில்லை. உண்மையான விவசாயி ராமையாதான்.

“வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்” என்றார் வள்ளலார். மனித நேயம் செத்து விடவில்லை. ராமையாக் கோனார் எனக்கு வள்ளலார் ஆக காட்சி அளிக்கிறார். எனக்கும், அவருக்கும் இன்னும் நெருக்கம் ஏற்பட்டது. கிராமங்களில் இன்றும், இன்னும் மனிதர்கள் வாழ்கிறார்கள்.


ஜீ. ராமசாமி. 59–சி, அசோக்நகர், மேற்கு
திண்டுக்கல் – 624001 . செல் : 8754394312

## தேன்கனி இயற்கை வேளாண்மை சந்தை



சுமார் 12 ஆண்டுகளுக்கு முன்னர் சிவகாசி திரு. கருப்பசாமி மூலம் தேன்கனி இயற்கை வேளாண்மை சந்தை உருவானது. இந்த சந்தை வாரத்தில் ஞாயிற்றுக்கிழமை காலையிலிருந்து மதியம் 1 மணி வரை நடக்கிறது. இந்த சந்தை சிவகாசி இரட்டைசிலை கார்னேஷன் ரோட்டில் நடக்கிறது. இதில் இயற்கையில் விளைந்த காய்கறிகள், கீரைவகைகள், பழங்கள், மூலிகைச் செடிகள், அரிசி, கேழ்வரகு, பருப்பு, சமையல் பண்டங்கள், கருப்பட்டி, வெல்லம், தூள்வெல்லம், தேன், செக்கு எண்ணெய், நெய், கடலை, எள் மிட்டாய், இயற்கை சாதம் போன்ற பல பொருட்கள் தயாரிப்பாளர்கள் அல்லது விவசாயிகளிடமிருந்து நுகர்வோருக்கு நேரிடையாக விற்பனை செய்யப்படுகிறது. இந்த சந்தைக்கு வரும் வாடிக்கையாளர்கள் தொடர்ந்து வருவதால் உழவர்களுக்கும் உற்பத்தியாளர்களுக்கும் வருமானமும், உற்சாகமும் கிடைத்து வருகிறது. திரு. கருப்பசாமி இந்த தேன்கனி இயற்கை சந்தை பற்றி கூறும் சமயம் நம்மாழ்வார் 2013 ல் சிவகாசிக்கு வந்த சமயம் இந்த ஒருங்கிணைப்பு உத்தி கூறப்பட்டது எனவும் அதன்பின் செயல்படுத்தி வருகிறோம் எனக் கூறுகிறார். இந்த சந்தை பல இடங்களில் கடைபிடிக்கப்பட்டு 20க்கும் மேற்பட்ட சந்தைகள் உருவாகி உள்ளன. இந்த தேன்கனி சந்தையில் 4 இயற்கை விவசாயிகள் மூலம் 200 நுகர்வோர் கலந்து கொண்டு பயன் பெறுகின்றனர்.

இந்த சந்தையில் கலந்து கொண்டு விவசாயப் பொருட்களை விற்பனை செய்யும் பேராம்பட்டி கனகசபையின் வேளாண்மை உத்திகள் பின்வருமாறு:

இவருக்கு கூட்டு விவசாய நிலம் 4 1/2 ஏக்கர் உள்ளது. இவர் பயிர் செய்யும் காய்கறி பயிர்களுக்கு மீன்அமினோ அமிலம், மூலிகை பூச்சி விரட்டி கரைசல், கடலைபிண்ணாக்கு போன்றவற்றைப் பயன்படுத்துகிறார்.

**மீன் அமினோஅமிலம்**

மீன் அமினோ அமிலம் தயார் செய்ய கழிவு மீன் 5 கிலோ மற்றும் 10 கிலோ கழிவு வெல்லம் சேர்த்து ஒரு பக்கெட்டில் சேர்க்க வேண்டும். வரிசைக்கிரமமாக 1/2 கிலோ மீன் கழிவு, 1 கிலோ வெல்லம் என்ற விகிதத்தில் 10 அடுக்காக சேர்த்து வைத்து விட்டால் 15 நாட்களில் தயாராகிவிடும். பின்னர் இதனை வடிகட்டி 10 லிட்டர் நீரில் 500 மி.லி. கரைசல் சேர்த்து கலந்து பின் பயிருக்குத் தெளிக்க வேண்டும். இதனை 3 தடவை 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்கலாம். ஒரு முறை மட்டும் தூரில் 1 தடவை இடலாம்.

**புண்ணாக்கு உரம்**

கால் ஏக்கரில் 30 கிலோ புண்ணாக்கு உரம் பயிர் நட்ட 30 நாளில் மேல் உரமாக மண்ணில் தூவி விடலாம். இதில் ஆமணக்கு, புண்ணாக்கு 20 கிலோவும் கடலைப்புண்ணாக்கு 10 கிலோவும் சேர்த்து கலந்து வைக்க வேண்டும்.

**மூலிகை பூச்சி விரட்டி கரைசல்**

வேப்பங்கொட்டையை அரைத்து 5 கிலோவை 8 லிட்டர் மாட்டு கோமியத்தில் சேர்க்க வேண்டும். பின்னர் இதில் 50 லிட்டர் நீர் சேர்த்து ஒரு பிளாஸ்டிக் பேரலில் தயார் செய்ய வேண்டும். இதனை 3 நாட்கள் நித்தமும் வலப்புறம் இடப்புறம் சுழலாக கலக்கி வர வேண்டும். 6வது நாளிலிருந்து இதனைப் பயன்படுத்தலாம். இந்த கரைசலை 1 லிட்டர் எடுத்து 10 லிட்டர் நீரில் கலந்து பயிருக்குத் தெளிக்க பூச்சி நோய் கட்டுப்படும்.

**சாம்பல்தூள்**

தேனீர் கடைகள், ஹோட்டல்களில் கிடைக்கும் அடுப்பு சாம்பல் சேகரித்து வைத்துக்கொண்டு பயிருக்குத் தூவினால் சிவப்புநிற வண்டுகள் கட்டுப்படும். அதாவது சுரைக்காய், பீர்க்கு, தடியங்காயில் சிவப்பு நிற பூச்சிகளால் ஏற்படும் தாக்குதலுக்கு இந்த சாம்பலை ஏக்கருக்கு 30 கிலோ விகிதம் பயிருக்குத் பயிர் மேல் தூவி வர வேண்டும்.

கருப்புசாமி,
காரநேசன் பேருந்து நிறுத்தம்
இரட்டை சிலை அருகில்
சிவகாசி.
செல் : 9443575431

# அருண்சங்கரின் இயற்கை வேளாண்மை




விருதுநகர் மாவட்டம், சிவகாசி அருகே தெற்கு ஆனைக்குட்டம் ஊரில் திரு. அருண்சங்கர் (வயது 36) 3 ஏக்கரில் கடந்த 5 ஆண்டுகளாக அருண் சங்கர் இயற்கை வேளாண்மை செய்து வருகிறார். இவர் டிப்ளோமா இன்ஜினியரிங் படித்து விட்டு தனியார் கம்பெனியில் செல்போன் டவர், பேட்டரி இன்வெர்ட்டர் பொருத்தும் பணியில் ஈடுபட்டுள்ளார். தற்பொழுதுள்ள சூழலில் விவசாயத்தை விட்டு விடாமல் பகுதி நேர வேலையாக அதாவது காலையில் சுமார் 6–9 மணி வரையிலும் மாலை 4 மணியிலிருந்து 6 மணி வரையிலும் நிலத்தில் வேலை செய்கிறார். கூடிய மட்டும் மினி டில்லர் உதவி கொண்டு நிலத்தில் மண் பரவி விடுதல், உரம் வைத்தல், மருந்து தெளித்தல் போன்ற பணிகளை இவரே செய்து வருகிறார். அவ்வப்போது இவருடைய துணைவியாரும், பிள்ளைகளும் உதவி செய்வர். விவசாயம் தவிர வீட்டில் வெள்ளாடு 10 எண்ணிக்கையில் பராமரித்து வருகிறார்.

நிலத்திலிருந்தே தேவையான தழை தீவனம் கிடைத்து விடுகிறது. இவர் கீரை, கத்தரிக்காய், மிளகாய், பூசணி, பந்தல் சுரை, அவரை, பப்பாளி போன்றவற்றை பயிர் செய்கிறார். இவர் வாரத்திற்கு ஒரு முறை அதாவது ஒவ்வொரு ஞாயிறு அன்றும் சிவகாசியில் நடைபெறும் தேன்கனி சந்தையில் தோட்டத்தில் விளைந்த பொருட்களை எடுத்துச்சென்று விற்பனை செய்கிறார். ஒவ்வொரு வாரத்திற்கு சுமார் 120 கட்டு கீரை (ஒரு கட்டு ரூ. 20) மற்ற பண்டங்கள் விற்று வருகிறார். வாரம் சுமார் ரூ. 4000–ரூ. 5000 வரை விற்பனையாகும். இந்த தேன்கனி இயற்கை சந்தையானது கடந்த 10 ஆண்டுகளாக திரு. கருப்பசாமி மூலம் ஏற்பாடு செய்யப்பட்டு நடந்து வருகிறது. ஞாயிற்றுக்கிழமை காலையிலிருந்து மதியம் 1 மணி வரை இந்த சந்தையில் கூடும் பல வாடிக்கையாளர்கள் தவறாது வருகை தந்து இயற்கை பண்டங்களை வாங்கி செல்கின்றனர்.

இவர் பின்பற்றும் இயற்கை வேளாண்மை உத்திகள் பின்வருமாறு: ஆரம்பத்தில் அடியுரமாக தொழு உரம் (குப்பை) இடுகிறார். பயிர் வளர்ந்து 15 நாளிலிருந்து மீன் அமினோஅமிலம், இ.ம்.தி. ரவக்கரைசல், பூச்சி விரட்டி இவைகளை 7–15 நாள் இடைவெளியில் கைதெளிப்பான் மூலம் தெளிக்கிறார்.

மீன் அமினோஅமிலம் தயார் செய்ய கழிவுமீன், கழிவு வெல்லம் சிவகாசியிலிருந்து பெற்று சேர்த்து வைத்து 1 மாதம் கழித்து வடிகட்டி 16 லிட்டர் நீருக்கு 200 மி.லி. கலந்து தெளிக்கிறார்.

ஈ.ம். கரைசல் தயார் செய்ய தாய்திரவம் 1 லிட்டர் கரைசல் வாங்கி வந்து 17 லிட்டர் நீர் + 2 கிலோ நாட்டு வெல்லம் கலந்து 20 நாட்கள் ஊற வைத்து விடுகிறார். பின்னர் இதிலிருந்து 1/2 லிட்டர் திரவம் எடுத்து 16 லிட்டர் நீரில் கலந்து கைத்தெளிப்பானில் தெளிக்கிறார். இந்த கரைசலையே மீண்டும் தாய் திரவமாகப் பயன்படுத்தலாம்.

பூச்சி விரட்டி தயார் செய்ய வேப்பங்கொட்டை 2 கிலோ, கோமியம் (மூழ்கும் அளவு), திருநீற்றுப்பச்சிலை 2 கிலோ சேர்த்து 1 வாரம் ஊற வைக்க வேண்டும். பின்னர் இதிலிருந்து சுமார் 250 மி.லி. எடுத்து 16 லிட்டர் நீரில் கலந்து பயிருக்கு தெளிக்க வேண்டும்.

**ஊர்பொது வேலை**

ஊரிலுள்ள இளைஞர்கள் படித்து விட்டு ஐ.டி. கம்பெனியில் வேலைக்கு சேர்ந்து வெளியூர் சென்று விட்டனர். இவருடைய முயற்சியால் ஊரில் எஞ்சியுள்ள இளைஞர்கள், மற்றும் திருவிழா சமயம் வரும் இளைஞர்களின் உதவியுடன் கண்மாய் தூர்வாருதல், பொது இடங்களில் மரம் நடுதல் போன்றவற்றை செய்து வருகிறார். இவருடைய முயற்சியினால் விஸ்வநந்தம் ஒட்டியுள்ள சிவன் கோவில் நிலத்திலும் பூங்கா ஏற்பாடு செய்ய முயற்சி எடுத்து வருகிறார். இவருடைய திட்டத்திற்கு பொதுமக்கள் மற்றும் சில நிறுவனங்கள் நன்கொடை தருகின்றனர் என்றும் கூறுகிறார்.

கே. அருண்சங்கர், தெற்குஆனைக்குட்டம்
வெற்றிலை ஊரணி அஞ்சல், சிவகாசி வட்டம்.
செல் : 9345041293

## வெட்டிவேர் சாகுபடி



வெட்டிவேரை பற்றிய குறிப்பு சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது. இது தமிழ்நாட்டுக்கே உரிய பாரம்பரிய தாவரம் ஆகும். சாரகா சம்ஹித்தா என்ற நூலிலும் காளிதாஸ் எழுதிய சாகுந்தலை என்ற வரலாற்றிலும் வெட்டி வேர் கூறப்பட்டுள்ளது. இது குளிர் பிரதேசத்திலும் வெப்ப சூழ்நிலையிலும் வளரும். உவர், களர் நிலங்களிலும், நீர் தேங்கி உள்ள இடங்களிலும் (3–6 மாதங்கள்) வளரும். இதனுடைய வேர் மண்ணில் 3–4 மீட்டர் வரை செல்லும். பூமிக்கு மேல் 1.5 மீட்டர் உயரம் வரை வளரும். இது மண்ணின் கரிம அளவை கூட்டும். மண் அரிமானத்தை தவிர்க்கும். இதனை நெல் வயலில் வரப்பில் நட்டு வைத்தால் நெற் பயிரை தாக்கும் தண்டுதுளைப்பான் பூச்சியை கட்டுப்படுத்தலாம்.



இதனை ஏரி, கண்மாய் குளங்களில், கரைகளில் நட்டு வைத்தால் கரைக்கு பலம் கிடைக்கும். இதனை 6 அங்குல இடைவெளியில் வரிசையாக நடவு செய்ய வேண்டும். கரைகளில் கல், கான்கிரீட் பதிப்பதை விட வெட்டி வேர் தாவரத்தை அடுக்காக நட்டு வைப்பது நல்ல உறுதியை கொடுக்கும். சாக்கடை கழிவு நீரை



சுத்தம் செய்வதற்கும் இந்த வெட்டிவேர் தாவரம் பயன்படுத்தப்படுகிறது. வெட்டிவேரின் நிலைகளை கால்நடைகள் விரும்பி உண்ணும். வெட்டிவேர் நட்ட 12–15 மாதங்களில் ஒரு ஹெக்டேர் நிலத்திலிருந்து 60–100 டன் அறுவடை செய்யலாம். வெட்டிவேர் பல மூலிகைகளிலும், வாசனைப் பொருட்களிலும் சேர்க்கப்படுகிறது. மானாவாரி நிலங்களில் இதனை ஒரு மாதம் மட்டும் தண்ணீர் விட்டு பின்னர் மழை நீரை நம்பி சாகுபடி செய்யலாம். இதன் இலைகளை 4 மாதங்களுக்கு ஒரு முறை அறுவடை செய்யலாம். இதன் தூரில் 180க்கு மேலான தாவரங்கள் உண்டாகும்.

பி.என். சுப்பிரமணியன், உதவி தலைவர்
வெட்டிவேர் அறக்கட்டளை,
C1403, ஹேப்பி டவஸ்,
பசிஃபிகா ஆரம், ஓ.ஆர்.எம் ரோடு, படூர் –603103
செல் : 9840035099

## ஏரியில் ஆக்கிரமிப்பை அகற்றுதல்



தர்மபுரி மாவட்டம், இன்டூர் கிராம ஏரி 55 ஏக்கர் பரப்பளவு கொண்டது. இது பல ஆண்டுகளாக தூர் வாராமல் இருந்தது. சுமார் 10 ஏக்கர் நிலத்தை பக்கத்து தோட்ட விவசாயிகள் ஆக்கிரமிப்பு செய்திருந்தனர். இதனை மாவட்ட ஆட்சியரிடம் தெரியப்படுத்தி தூர்வாருவதற்கு அனுமதி பெற்றேன். பின்னர் ஆட்சியர் அவர்களை பார்வை இடச் செய்து அதிகாரிகளின் துணையுடன் படிப்படியாக ஜேசிபி மூலம் ஆக்கிரமிப்பை 6 மாதங்களில் அகற்றி விட்டோம். ஆதி அறக்கட்டளை மூலமும் எக்ஸ்னோரா உதவியுடனும் இலவசமாக ஜேசிபி இயந்திரம் வைத்து ஏரிப்பணிகளை செய்து வருகிறோம்.

ஆதிமூலம், ஆதி அறக்கட்டளை,
இன்டூர், தர்மபுரி மாவட்டம்.
செல் :9787488460

## பர்கூர் மலைமாடு மேய்ப்போர் கூட்டம்



3.3.2026 தேதி அன்று பர்கூர், தோனகிரி மடத்தில் பட்டிமாடுகள் வளர்ப்போர் கூட்டம் நடைபெற்றது. இதில் 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். பர்கூர் மாட்டு இனஆராய்ச்சி மையத்திலிருந்து திரு. சுபாஸ், மலைவாசி அறக்கட்டளையிலிருந்து திரு. அன்பு, தமிழ்நாடு மேயச்சல் சமூக கூட்டமைப்பிலிருந்து திரு. ராஜீவ்காந்தி, தோனகிரி மடத்தலைவர் அசோகராஜேந்திசாமி, எண்ணமங்கலம் சிவசேனாபதி போன்றோர் கலந்து கொண்டனர். சுமார் 1000 வருடங்களுக்கு முன் மாதேஸ்வர சாமியின் வழித்தோன்றலாக சித்த வீரேஸ்வரர்சாமியின் 36 வது குருபீடம் வந்துள்ளது. இந்த மடம் வந்த பின்னர் லிங்காயத் சமூகத்தினர் மலையில் வேட்டையாடுவதை நிறுத்திவிட்டனர். மாமிசத்தையும் உண்பதில்லை. கேழ்வரகு பயிர் செய்து சைவ உணவை உண்ண ஆரம்பித்தனர். மாடுகளையும் பராமரித்து விவசாயத்திற்கு வைத்துக் கொண்டனர். மலைகளில் வனவிலங்குகளையும் குறிப்பாக யானைகளையும் பாதுகாக்கின்றனர். ஆனால் வனத்துறையினர் செய்யும் கொடுமையால் வனத்தில் பட்டி போட முடியாமல் அல்லல் படுகின்றனர். வனஉரிமைச்சட்டப்படி வனகிராமசபை அமைத்து வனத்தில் பட்டி போடுவதை தொடர்வதற்கு தீர்மானம் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. 7.3.2026 தேதி அன்று மாவட்ட ஆட்சியர் திரு. கந்தசாமி மடத்திற்கு வருகை தந்து குறைகளை களைவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று கூறி சென்றுள்ளார்.

அசோக ராஜேந்திரசாமி, தோனகிரிமடம்
பர்கூர், ஈரோடு மாவட்டம் செல் : 9489889491

## பேட்டரி மோட்டார் மூலம் இயங்கும் களையெடுக்கும் கருவி



இது 48 வோல்டேஜ் பேட்டரி மூலம் இயங்கும். இந்த கருவியில் 2 சக்கரங்கள் உள்ளன. முதலில் உள்ள சிறு சக்ரம் 15 தடவை சுற்றினால் பின்னால் உள்ள பெரிய சக்ரம் ஒரு சுற்று சுற்றும். இந்த 2 சக்கரங்களும் ஒரு செயின் மூலம் இணைக்கப்பட்டிருக்கும். மற்றும் இதில் 25 எம். எம். சதுரக்குழாய், 20 எம்.எம். சதுரக்குழாயால் இணைக்கப்பட்டிருக்கும். இதனை பயிர் ஓரத்திலே செலுத்தி களையெடுக்க முடியும் . அதாவது பயிருக்கு எந்த சேதாரமும் ஏற்படாது. இதன் விலை ரூ. 60,000 வரை ஆகும்.

இரமேஷ்
மாரியம்மன் கோவில், தஞ்சாவூர், செல் : 9514694286

## பட்டி போடுவோம், பட்டி போடுவோம் – பாடல்

பட்டி போடுவோம், பட்டி போடுவோம்.
நிலத்தில் பட்டி போடுவோம்
மீட்ட உரிமையால் வன உரிமை சட்டத்தால் நிலத்தில் பட்டி நிலத்தில் போடுவோம்
இயற்கைவழியில் உரமும் தருவோம், இயற்கை வழியில் உரமும் தருவோம் நிலத்தில் இயற்கை வழியில் உரமும் தருவோம்
செயற்கை இன்றியே செய்யும் தொழிலை போற்றியே
(பட்டி போடுவோம்)
– நிலத்தில் இயற்கை வழியில் உரமும் தருவோம்,
வன விலங்கும் வாழும், வன விலங்கும் வாழும்,
வன விலங்கும் வாழும் எங்கள் கிடையுடனே
வன விலங்கும் வாழும்
ஆனையுடனே சிங்கம் புலி கூடவே
எங்கள் கிடையுடனே வன விலங்கும் வாழும் (பட்டி)
மேய்ச்சல் நிலமும் காக்கும் இடமாம், மேய்ச்சல் நிலமும் காக்கும் இடமாம், பொது மேய்ச்சல் நிலமும் காக்கும் இடமாம், பாய்ச்சல் காளையும் பட்டி பெருகவும் பொது மேய்ச்சல் நிலமும் காக்கும் இடமாம்
(பட்டி போடுவோம்)

## ஆடுகளின் மூலிகை வைத்ய செயலியில் வரும் வைத்ய முறைகள்

(சென்ற இதழில் பக்கம் : 20ல் வெளியிடப்பட்ட வைத்ய முறைகளின் தொடர்ச்சி)

**6. வெளிப்புற ஒட்டுண்ணிகள்**

**(ஒட்டுண்ணி, பேன்கள், செல்கள்)**

அறிகுறிகள் :

ஆடுகளின் தோல் பகுதியில் உரோமத்திற்குள் மறைந்து கொண்டு அதிக எண்ணிக்கையில் ஒட்டுண்ணிகள் காணப்படும். குளம்புகளுக்குள் காது மடலுக்குள் மற்ற உடல் பகுதிகள் அனைத்திலும் நேரடியாக ஒட்டுண்ணிகளை பார்க்கலாம். ஆடுகள் இரத்த சோகை பாதிப்பால் மிகவும் மெலிந்து இளைத்து காணப்படும். பாதிக்கப்பட்ட கால்நடைகள் மிகவும் சோர்வுடன் காணப்படும். அதிக பாதிப்பு உள்ளவை இறந்து விடும்.

வைத்தியம் :

வெள்ளைப்பூண்டு, துளசி, வேப்பிலை, மஞ்சள் பொடி, சீதாப்பழ விதைகள் ஒவ்வொன்றும் 10 முதல் 20 கிராம் அளவுக்கு எடுத்துக் கொண்டு நன்றாக அரைத்த கலவையை 250 மி.லி வேப்பெண்ணெய் சேர்த்து கொதிக்க வைக்க வேண்டும். இந்த மூலிகை கலந்த வேப்பெண்ணெயினை ஆடுகளுக்கு மேற்புறத்தோல் பகுதியில் தேய்த்து பூசவும்.

அல்லது

உண்ணிச்செடியினை (Lantana camara) பறித்து சிறு துண்டுகளாக நறுக்கி அதனை இடித்து அதில் தேவையான அளவு பசு மாட்டின் கோமியம் சேர்த்து கலக்கி 3 நாட்கள் ஊறவைக்க வேண்டும். இந்த கலவையை வைத்துக் கொண்டு தொடர்ச்சியாக 3 நாட்களுக்கு பாதிக்கப்பட்ட ஆடுகளுக்கு வெளிப்புறம் பூசி விடவும். புகையிலை இலை, தண்டு பகுதியை 250 கிராம் அளவு 2 லிட்டர் அளவு நீரில் நன்றாக கொதிக்க வைக்கவும். இந்த திரவத்தில் 5 லிட்டர் நீர் சேர்த்து தெளிப்பான் உதவியுடன் 10 முதல் 20 ஆடுகளுக்கு வெளிப்புறமாக தெளிக்க வேண்டும்.

அல்லது

கந்தகத்தூள் (சல்பர்) 10 கிராம் எடுத்து தூளாக வைத்துக்கொள்ள வேண்டும். 10 கற்பூரவில்லையை அரைத்து தனியாக வைத்து கொள்ள வேண்டும். வேப்பஎண்ணெய் அல்லது புங்க எண்ணெய் 100 மி.லி.யில் மேற்கண்ட பொருட்களை கலந்து ஆடுகளுக்கு வெளிப்புறத்தில் தடவி விட வேண்டும். பின்னர் 2 நாட்கள் கழித்து ஒட்டுண்ணிகள் இறந்தவுடன் குளிப்பாட்டலாம்.

**7. சுவாசம் சம்பந்தப்பட்ட நோய்கள்**

மூச்சு வெளியேறும் போது குறட்டை சத்தம் கேட்கும். மூச்சு விடுவதற்கு சிரமப்படும், மூக்கிலிருந்து சளி வரும். தும்மல் வரும்.

வைத்தியம் : துளசி இலை 100 கிராம், ஆடாதொடை இலை 100 கிராம், இஞ்சி 50 கிராம், மிளகு 10 கிராம், வெல்லம் 100 கிராம் ஆகிய அனைத்தையும் ஒரு லிட்டர் நீரில் கொதிக்க வைத்து ஆறவைத்து 100 மி.லி முதல் 250 மி.லி அளவு தேவைக்கு ஏற்பவும் எடைக்கு தகுந்த படி மேற்குறிய மூலிகை கசாயாத்தை தினசரி 2 அல்லது 3 முறை வழங்கலாம்.

அல்லது

கண்டங்கத்திரி பழம் சிறிதளவு (6 முதல் 8), மிளகாய்ப்பழம் 3, சுண்ணாம்புத்தூள் 5 கிராம் சேர்த்து அரைத்து 1/2 லிட்டர் சுடுநீரில் கலந்து 20 நிமிடங்கள் வைக்கவும். இதனை வடிகட்டி ஆட்டுக்கு 1/4 லிட்டர் உள்ளே தரவும். ஒரு நாளைக்கு ஒரு வேளை, 2–3 நாட்கள் தர வேண்டும்.

அல்லது

மூக்கில் ஈ முட்டை இடுவதால் வரும் மூக்கடைப்பானுக்கு கண்டங்கத்திரி பழம் சிறிதளவு (4 முதல் 6) இவைகளை நசுக்கி ஆட்டு சிறுநீரில் அல்லது பசு மாட்டின் கோமியத்தில் இரவு முழுவதும் அதனை ஊற வைத்து பின்னர் வடிகட்டி எடுத்துக் கொள்ளவும். மேற்கூறிய வடிகட்டிய திரவத்தை ஒரு சில துளிகள் மட்டும் பாதிப்புள்ள ஆடுகளுக்கு மூக்கில் உள்ளே விடவும்.

**8. காய்ச்சல்**

அறிகுறிகள்:

ஆடுகளின் உடல் அதிக சூடாகக் காணப்படும். கால்கள் நடுங்கிக் கொண்டே இருக்கும். ஆடு கீழே படுத்தே இருக்கும். முடி சிலிர்த்துக்கொண்டிருக்கும். கண்கள் சிவந்து காணப்படும். சாணம் போடாது. தீவனம் உண்ணாது. வாயில் நீர் வடிந்து கொண்டே இருக்கும்.

கால்கள் மற்றும் உடம்பில் நடுக்கம் ஏற்படுதல். உரோமம் குத்திட்டு மேல் நோக்கி இருத்தல். கண்களில் நீர் சொரிதல். பாதிக்கப்பட்ட ஆடு படுத்தே இருத்தல். தீவனம் அல்லது தண்ணீர்

அருந்தாமல் இருத்தல். பால் உற்பத்தியில் குறைவு ஏற்படுதல்.

தேவையான பொருட்கள்:

வைத்திய முறை:

தும்பை இலை, வேப்ப இலை, நொச்சி இலை, தைலமர இலை இவை நான்கையும் கைப்பிடி வீதம், சாம்பிராணித்தூள் 50 கிராம், சுக்கு, மிளகு, ஓமம், பெருங்காயம், பூண்டு, முடக்கத்தான் இலை. ஆறு வகைக்கு 25 கிராம், சித்தரத்தை 5 கிராம், வேப்பெண்ணெய் 50மி.லி. சேர்த்து தணலில் இட்டு போட வேண்டும். மூன்று நாட்கள் வரை புகை காட்ட வேண்டும்.

சுக்கு, மிளகு, பூண்டு, ஓமம், பெருங்காயம், முடக்கத்தான் இலை ஆறு வகைக்கு 25 கிராம் எடுத்து இதோடு சித்தரத்தை 5 கிராம் சேர்த்து அரைத்து, வேப்பெண்ணெயில் 50 மி.லி. கலந்து ஒருவேளை விதம் மூன்று நாட்களுக்கு வாய்வழியே கொடுக்க வேண்டும்.

மண் சட்டியில் அடுப்புக்கரி அல்லது காய்ந்த விறகு உதவியுடன் தீக்கங்கினை உண்டாக்கி தீக்கங்கில் வேப்பங்கொட்டை விதைகள் 100 கிராம் (வேப்பங்கொட்டை தோலையும் போடலாம்). இதில் தும்பை, வேப்பஇலை, முடக்கத்தான் இலையும் சேர்க்கலாம். இதிலிருந்து வரும் புகையை ஆடுகளின் தலை முன்பு படுமாறு வைக்கவும். பாதிக்கப்பட்ட ஆடு மேற்கூறிய புகையினை நன்கு சுவாசிக்கும் படி செய்தல் வேண்டும்.

ஓமம், கஸ்தூரிமஞ்சள், வெள்ளைப்பூண்டு, மிளகு இவை நான்கினையும் ஒவ்வொன்றும் 5 கிராம் அளவுக்கு எடுத்துக் கொண்டு அதனை தூள் செய்து சுடு நீரில் கலந்து கரைத்து தேவைக்கு ஏற்ப வாய் மூலம் உள்ளே ஒரு நாளைக்கு 2 முறை கொடுக்கவும்.

அரிசி அல்லது கம்பு குருணையாக செய்து 250 கிராம் அளவு நீரில் கலந்து கொதிக்க வைத்து ஆறியவுடன் ஆடுகளுக்கு வழங்கலாம்.

குடிநீர் வழங்கப்படும் போது நன்றாக கொதிக்க வைத்து ஆறிய குடிநீரை மட்டும் கொடுக்கவும். பச்சை புல், பச்சை தீவனத்தட்டை தீவனமாக கொடுப்பதை தவிர்த்து காய்ந்த தட்டை அல்லது வைக்கோல் கொடுக்கலாம்.

**9. கோமாரி நோய்** (கால்காணை வாய்காணை)

1. அறிகுறிகள் : பாதிக்கப்பட்ட ஆட்டின் வாயில் உமிழ்நீர் வெளிவரும். வாய்ப்பகுதியில் புண்கள் காணப்படும். கால் குளம்புகளின் இடைவெளியில் சீழ் பிடித்த புண்கள் தெரியும். பாதிக்கப்பட்ட ஆடுகள் நடப்பதற்கு மிகவும் சிரமப்படும்.

வைத்தியம் : தேவையான பொருட்கள் மற்றும் அளவுகள் புதிதாக அறுவடை செய்யப்பட்ட மஞ்சள் கிழங்கு 200 கிராம் ஒரு தேங்காயில் எடுக்கப்பட்ட தேங்காய் துருவல் சோற்றுக்கற்றாழை மடல் – 200 கிராம், வெல்லம் – 200 கிராம், சமையல் உப்பு – 100 கிராம், வெள்ளைப்பூண்டு – 100 கிராம், மிளகு – 50 கிராம், சீரகம் – 50 கிராம், வெந்தயம் – 50 கிராம்.

கிரைண்டர் அல்லது மிக்ஸி உதவியுடன் தேங்காய் துருவல், சோற்றுக்கற்றாழை, மஞ்சள் கிழங்கு, வெள்ளைப்பூண்டு ஆகியவற்றை நன்றாக அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும். தேவையான நீர் கலந்து அரைத்து அதனை சுத்தமான பாத்திரத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

மிளகு, சீரகம், வெந்தயம் ஆகியவற்றை தூள் செய்து, தூள் செய்த வெல்லத்துடன் மேற்கூறிய மூலிகை மருந்து கலவையில் சேர்க்க வேண்டும். இதில் தேவையான அளவு தண்ணீர் சேர்த்து ஒரு லிட்டர் அளவு வரும் வரை வைத்துக்கொள்ள வேண்டும். இதனை வடிகட்டி எடுக்கப்பட்ட மூலிகை திரவத்தை வாய் மூலம் ஆடுகளுக்கு உள்ளே கொடுக்க வேண்டும். மருந்து கொடுக்கும் அளவு ஆடுகளுக்கு 50 மி.லி. மூலிகை திரவ மருந்து பாதிக்கப்பட்ட ஆடுகளுக்கு கொடுப்பதற்கு முன் ஒரு வாழைப்பழத்தை 20 மி.லி நல்லெண்ணெயில் தோய்த்து வாய் மூலம் கொடுக்கவும். இதனை 2 வேளைகள் 2–3 நாட்களுக்கு கொடுத்து வரலாம்.

கால் குளம்பு பகுதியில் உள்ள புண்களுக்கு தைலம் தயாரிக்கும் முறை :

தேவையான பொருட்கள் : நல்லெண்ணெய் – ஒரு லிட்டர், மஞ்சள் கிழங்கு புதிதாக அறுவடை செய்யப்பட்டது– 100 கிராம் அல்லது மஞ்சள் பொடி – 50 கிராம், வெள்ளைப்பூண்டு – 50 கிராம், வேப்ப இலை – 10 கிராம், மருதாணி செடி இலை – 10 கிராம் குப்பைமேனி இலை – 10 கிராம்.

மூலிகை இலைகள், மஞ்சள், வெள்ளைப்பூண்டு ஆகியவற்றை நன்றாக அரைத்து கலந்து கொள்ளவும். இவற்றை நல்லெண்ணெய்யுடன் கலந்து மூலிகை கலந்த எண்ணெயை நன்கு கொதிக்க வைக்கவும். கொதிக்க வைத்த மூலிகை எண்ணெயை ஆற வைத்து வடிகட்டி ஒரு பாட்டிலில் ஊற்றி வைத்துக் கொள்ளவும்.

மேற்கூறிய மூலிகை தைல எண்ணெய் தினசரி புண் பாதித்த குளம்புகள் மீது பூசவும் தேவைக்கு ஏற்ப தொடர்ச்சியாக 3 நாட்களுக்கு அல்லது குளம்பு புண் நன்றாக ஆறி சரியாகும் வரை பூசலாம்.

இரண்டாவது முறை :

தேங்காய் எண்ணெய் 500 மி.லியுடன் ஊமத்தை இலைச்சாறு 500 மி.லி சேர்த்து இந்த கலவையை ஒரு பாத்திரத்தில் எண்ணெய் பதம் வரும் வரை சுமார் ஒரு மணி நேரம் கொதிக்கவிட வேண்டும். பின்னர் அடுப்பை அணைத்து விட்டு இந்த எண்ணெய் பதத்தில் உள்ள திரவத்தில் 5 கிராம் அளவு மயில் துத்தம் கலந்து நன்றாக கலக்க வேண்டும். இந்த தைலத்தை சுத்தமான கண்ணாடி பாட்டிலில் சேமித்து வைத்துக் கொண்டு தேவைப்படும் போது பயன்படுத்தலாம்.

கோமாரி நோய் கால் குளம்பு புண்ணுக்கு மட்டும் அல்லாமல் மற்ற வகை புண்களுக்கு ஈ முட்டையிட்டதால் வந்த புழு வைத்த புண்களுக்கும் இந்த தைலத்தைப் பயன்படுத்தலாம்.

நோய் பாதித்த கால்நடைகளுக்கு அரிசி, கோதுமை, கம்பு, கேழ்வரகு குருணைகளை 100 கிராம் கொதிக்க வைத்து ஆற வைத்து கஞ்சியாக தினமும் குடிநீரில் கலந்து தானே குடிப்பதற்கு கொடுக்கலாம்.

**10. பால் கறவை ஆடுகளில் மடி நோய்**

அறிகுறிகள் : பாதிக்கப்பட்ட பால் மடி பெரிதாக வீக்கத்துடன் இருத்தல், மடியைத் தொட்டுப் பார்த்தால் மிகவும் சூடாக இருத்தல், பால் நிறம் திரிந்து நூல் போலும் சீழ் போன்ற அடர்த்தியுடன் இருத்தல்.

காரணங்கள்: தொற்றும் நோய் கிருமிகள்:

வைத்தியம்: தேவையான மூலிகைப் பொருட்கள் சோற்றுக்கற்றாழை 2 அல்லது 3 மடல்கள், மஞ்சள் பொடி – 50 கிராம், சுண்ணாம்புக்கல் / தூள் – 10 கிராம், சோற்றுக்கற்றாழையை மிக்சியில் அரைத்து இத்துடன் மஞ்சள் தூள், சுண்ணாம்புத்தூள் சேர்த்து கலந்து கொள்ள வேண்டும். பால் கறந்தபின் மடியை வெந்நீரால் கழுவி இந்த களிம்பினை தேவைக்கு ஏற்ப ஒரு நாளைக்கு 3 வேளையும் பாதித்த மடியின் மேல் பூச வேண்டும். வியாதியின் தன்மைக்கு ஏற்ப 3 முதல் 7 நாட்கள் வரை இந்த களிம்பினை பாதிக்கப்பட்ட மடி மீது பூசலாம்.

மேலும் கீழ்க்கண்ட மருந்தினை தயார் செய்து வாய் மூலம் கொடுக்கலாம். நான்கு எலுமிச்சை பழங்களை பிழிந்து கிடைத்த சாற்றுடன் 50 கிராம் சமையல் சோடா சேர்த்து 100 மி.லி குடிநீர் சேர்த்து இந்த சாற்றினை பாதிக்கப்பட்ட ஆடுகளுக்கு வாய் மூலம் உள்ளே கொடுக்கலாம்.

–கோவிந்தன், அயோத்தியபட்டினம், சேலம்.

**11. சினை தங்காமை / பருவ அறிகுறி தோன்றாமை /கருச்சிதைவு நோய்கள்**

அறிகுறிகள்:

ஆடுகள் பருவத்திற்கு வராமல் இருக்கும், பருவத்திற்கு வந்தாலும் பருவ அறிகுறிகள் வெளியே தெரியாமல் இருத்தல், பலமுறை தொடர் இனவிருத்தி செய்தும் கருப்பிடிக்காமல் இருத்தல், சினை தங்காமல் கருச்சிதைவு ஏற்படுதல்.

வைத்தியம்:

சோற்றுக்கற்றாழை மடல் முள் நீக்கி 1 மடல் தொடர்ச்சியாக 3 நாட்களுக்கு காலையில் வெறும் வயிற்றில் ஆடுகளுக்கு கொடுக்க வேண்டும். 7 நாட்களுக்குத் தொடர்ச்சியாக 50 கிராம் அளவு முளைகட்டிய கொண்டைக்கடலை அல்லது முளை கட்டிய கோதுமை விதைகள் அல்லது முளை கட்டிய கம்பு வாய் மூலம் உள்ளே கொடுக்க வேண்டும். பின்பு 2 கைப்பிடி அளவு கறிவேப்பிலை இலைகள் தினசரி 3 நாட்களுக்கு கொடுக்க வேண்டும்.

**12. இளங்கொடி விழாதிருத்தல்**

அறிகுறிகள் :

ஆட்டுக்குட்டி பிறந்த பின்னர் 3 முதல் 5 மணி நேரத்திற்குப்பிறகும் நஞ்சுக்கொடி விழாமலிருத்தல்.

வைத்தியம்: 2 எள் செடியின் இலைகள் சுமார் 100 கிராம் அளவு அரைத்து ஒரு லிட்டர் நீரில் கலந்து

பாதிக்கப்பட்ட ஆடுகளுக்கு வாய் மூலம் உள்ளே கொடுக்கலாம். அல்லது வெண்டைக்காய் 1/4 கிலோ தின்னக் கொடுக்கலாம். 50 கிராம் அளவு எள் விதையினை 50 கிராம் வெல்லத்தை சேர்த்து இடித்து உருண்டையாக வாய் மூலம் கொடுக்கலாம்.

யானை நெருஞ்சிச்செடி 100 கிராம் அளவு எடுத்து நறுக்கி ஒரு லிட்டர் நீரில் சில நிமிடங்கள் ஊற வைத்து கலக்கினால் சோப்பு போன்ற நுரையுடன் கூடிய திரவம் கிடைக்கும். இந்த திரவத்தை பாதிக்கப்பட்ட ஆட்டுக்கு வாய்க்குள் புகட்ட வேண்டும்.

**13. கர்ப்பப்பை வெளித்தள்ளுதல்**

அறிகுறிகள் :

ஆட்டுக்குட்டி பிறப்புக்கு முன்னர் அல்லது ஆட்டுக்குட்டி பிறந்த பின்னர் கர்ப்பப்பை வெளித்தள்ளுதல்.

வைத்தியம்: வெளித்தள்ளப்பட்ட கர்ப்பப்பையின் வெளிப் புறத்தில் சீனி சேர்க்கப்பட்ட நீரை பயன்படுத்தி சுத்தம் செய்தல் வேண்டும். வெளியேற்றப்பட்டுள்ள கர்ப்பப்பை பகுதியின் கீழ் ஒரு பெரிய வாழை இலையைக் கொண்டு இரண்டு கைகளால் தாங்கி பிடிக்க வேண்டும். (கர்ப்பப்பை பகுதியை கையாளும் போது மிகவும் கவனத்துடனும் நகம் படாமலும், கையாளும் போது கிழிபடுதல் அல்லது புண் ஏற்படாமலும் செயல்பட வேண்டும். கர்ப்பப்பை பகுதியை தொடுவதற்கு முன் இரண்டு கைகளையும் கிருமி நாசினி உபயோகித்து சுத்தமாக இருத்தல் வேண்டும்). பெருவாரியான சமயங்களில் கர்ப்பப்பை வெளித்தள்ளப்பட்ட பின் சிறுநீர் வெளியேறாமல் சிறுநீர்ப்பை முழுவதும் சிறுநீரால் நிறைந்து காணப்படும். வாழை இலையைப் பயன்படுத்தி கர்ப்பப்பை பகுதியை உயர்த்தி பிடிக்கும் போது சிறுநீர் முழுவதும் வெளியேறும். சிறுநீர் முழுவதும் வெளியேறிய பின் வெளியேற்றப்பட்ட கர்ப்பப்பை பகுதியை மீண்டும் பழைய நிலைக்கு உள்ளே தள்ளினால் எளிதாகச் செல்லும். ஒரு கைப்பிடி அளவு தொட்டாற்சிணுங்கிச் செடியின் இலைகளை அரைத்து 100 மி.லி பசும்பாலில் கலந்து காலை, மாலை மறுநாள் காலை என்று 3 முறை வாய் மூலம் கொடுக்கவும்.

**14. நீல நாக்கு நோய்**

நோய் ஏற்படும் காலம் :

செம்மறி ஆடுகள், வெள்ளாடுகளுக்கு இந்நோய் மழைக்காலத்தில் உண்டாகும்.

அறிகுறிகள்:

வாய்ப்பகுதியில் சீழ் பிடித்த புண், வாயிலிருந்து உமிழ்நீர் ஒழுகுதல், பாதிக்கப்பட்ட ஆடுகள் நொண்டி நொண்டி நடப்பது, நடக்க இயலாமல் சில நேரம் படுத்துக் கொள்ளும், பாதிக்கப்பட்ட ஆடுகளை எழுப்பிவிட முயலும் போது ஆட்டுத் தோலில் உள்ள உரோமங்கள் உடலில் இருந்து கீழே விழுந்து விடுதல், தீவனம் எதுவும் தின்னாமல் இருக்கும். ஆனால் சிறிய அளவு தண்ணீர் மட்டும் குடிக்கும்.

நோயின் தீவிரம் அதிகரிக்கும் போது நோய் பாதித்த 15 நாட்களில் ஆடுகள் இறந்து விடும். ‘வைரஸ்’ நுண்கிருமியினால் இந்த நோய் உண்டாகிறது. கொசுக்களும், ஈக்களும் இந்த நோய் கிருமியைப் பரப்பும் காரணிகளாக செயல்படுகிறது.

வைத்தியம் : பாதித்த ஆடுகள் தீவனம் எதுவும் எடுக்காமல் இருப்பதால் பட்டினியால் இறப்பு ஏற்படும். இதற்கு பூவன் வாழைப்பழத்தை நல்லெண்ணெயில் கலந்து ஒரு ஆட்டிற்கு ஒரு பழம் தர வேண்டும். 20 ஆடுகளுக்கு சுமார் 1/2 லிட்டர் நல்லெண்ணெய் மற்றும் 20 வாழைப்பழம் தேவைப்படும். மேற்கூறிய வைத்தியத்தால் சிறிது சிறிதாக பாதிக்கப்பட்ட ஆடுகள் நோய் பாதிப்பில் இருந்து மீண்டு வரும். இருப்பினும் இந்த சிகிச்சை நோயின் தீவிரத்தை குறைக்க உதவாது. எனவே தொடர் சிகிச்சையாக சோற்றுக்கற்றாழை (முள் தோல் நீக்கப்பட்டு) நொங்குப் பகுதியை சுமார் 100 கிராம் தினசரி வாய் வழியே உள்ள புகட்ட வேண்டும். ஆடுகள் நோயின் பாதிப்பிலிருந்து மீண்டு வரும் வரை (தொடர்ந்து 3–4 நாட்கள்) சோற்றுக்கற்றாழை மடல் தினசரி வாய் மூலம் கொடுத்து வர வேண்டும். சோற்றுக்கற்றாழையை தொடர்ச்சியாக ஆடுகளுக்கு கொடுத்து வரும் சமயம் அதன் உடல் எடை

அதிகரிக்கும். ஆடுகளின் வயிற்றில் உள்ள புழுக்கள் நீங்கும். குடற்புழு மருந்தாக சோற்றுக்கற்றாழை செயல்படும்.

மேற்கூறிய காரணத்தால் மழைக்காலங்களில் ஆடுகளில் நோய் பாதிப்பு ஏற்படாமல் இருப்பதற்காக நோய் தவிர்ப்பு வைத்தியமாக ஒவ்வொரு மாத இடைவெளியில் வாய் வழியே சோற்றுக்கற்றாழை மடலை கொடுக்க வேண்டும்.

**15. விஷக்கடி அல்லது விஷமுள்ள தீவனம் உண்ட பாதிப்பு**

வைத்தியம் :

வெற்றிலை, துளசி, மிளகு, சுக்கு ஆகியவை ஒவ்வொன்றும் 10 கிராம் அளவு எடுத்துக் கொண்டு அதனை இடித்த கலவையுடன் வெது வெதுப்பான நீரில் கலந்து வாய் வழியே உள்ளே கொடுக்க வேண்டும்.

அடுப்புக்கரி 50 கிராம் எடுத்து 250 மி.லி. பாலில் கலக்க வேண்டும். இத்துடன் 500 மி.லி. நீர் சேர்த்து உள்ளே புகட்டவும். ஒரு நாளைக்கு ஒரு தடவை 2 நாட்கள் தரவும்.

பொன்னுச்சாமி, ஓடைப்பட்டி, திண்டுக்கல்

## இயற்கை வேளாண்மை பயிர்சாகுபடி

**1. ராகி (கேழ்வரகு) சாகுபடி**

பட்டம் : ஆடி, புரட்டாசி, தைப்பட்டம்.

உழவு : நிலத்தை 3–4 முறை நன்றாக உழுதல் வேண்டும்.

அடி உரம் : ஏக்கருக்கு 10 வண்டி தொழுவுரம் கலந்து சீராக பரப்ப வேண்டும். கனஜீவாமிர்தம் ஓர் ஏக்கருக்கு 100 கிலோ என்ற அளவில் அடியுரமாக விதைக்கு முன் இடலாம்.

விதைப்பு : நேரடி விதைப்பு என்றால் ஓர் ஏக்கருக்கு 10 கிலோ விதை தேவைப்படும். நடவு முறையில் 2 கிலோ தேவைப்படும். செடிக்கு செடி 30 முதல் 60 செ.மீ. இடைவெளி இருத்தல் வேண்டும். 20 – 25 நாட்கள்ஆன நாற்றுக்களை பிடுங்கி வேர்ப் பாகத்தை பீஜாமிர்தம் கரைசலில் சில நிமிடங்கள் வைத்திருந்து பின்நடவு செய்யலாம். ஊடு பயிராக துவரை மற்றும் அவரை பயிர் செய்யலாம்.

**நீர்ப்பாசனம் :** நட்ட பின் 2–3 நாட்கள் இடைவெளியில், பின்னர் 4–5 நாட்கள் இடைவெளியில் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும்.

மேலுரம் : மானாவாரி நிலத்தில், கனஜீவாமிர்தம் ஓர் ஏக்கருக்கு 100 கிலோ மழை பெய்த ஈரத்தில் 30 வது நாள் இடவேண்டும். 40வது நாளில் ஜீவாமிர்தம் 30 லிட்டரை 200 லிட்டர் தண்ணீரில் கரைத்து மேலுரமாக தெளித்தல் வேண்டும்.

பயிர் பாதுகாப்பு:

50வது நாள் பூச்சி விரட்டி 700 மில்லியை 10 லிட்டர் தண்ணீரில் கரைத்து தெளிக்க வேண்டும். 65வது நாள் பஞ்சகவ்யா மற்றும் பூச்சி விரட்டியை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.(பஞ்சகவ்யா 200 மில்லி மற்றும் பூச்சி விரட்டி 500 மில்லி)

அறுவடை: பயிரிட்ட 120 – 160 நாட்களில் கேழ்வரகு வளர்ச்சி அடைந்து அறுவடைக்கு தயாராகி விடும்.

விளைச்சல்: மானாவாரியில் 10 – 12 குவிண்டால், மகசூல் மற்றும் நீர்ப்பாசனத்தில் 16 முதல் 18 குவிண்டால் வரை ரகங்களுக்கு ஏற்றபடி விளைச்சல் கிடைக்கும்.

**2. இயற்கை கம்பு / சோளம் சாகுபடி**

பட்டம் : ஆடி, புரட்டாசி, தைப்பட்டம்.

உழவு : நிலத்தை 3–4 முறை நன்றாக உழுதல் வேண்டும்.

மேலுரம் : ஏக்கருக்கு 10 வண்டி தொழுவுரம் கலந்து சீராக பரப்ப வேண்டும். கனஜீவாமிர்தம் ஓர் ஏக்கருக்கு 100 கிலோ அடியுரமாக விதைக்கும் முன் இடலாம்.

விதைப்பு :

நேரடி விதைப்பு என்றால் ஓர் ஏக்கருக்கு 10 கிலோ விதை விதைத்தல் வேண்டும். நடவு முறையில் 2 கிலோ விதை தேவைப்படும். செடிக்கு செடி 30 – 60 செ.மீ. இடைவெளி இருக்குமாறு பார்த்துக் கொள்ளவும். நாற்றங்காலில் 20 – 25 நாட்கள் ஆன நாற்றுக்களை பிடுங்கி வேர்ப்பாகத்தை பீஜாமிர்தம் கரைசலில் சில நிமிடங்கள் வைத்திருந்து பின்பு நடவு செய்யலாம். ஊடுபயிராக துவரை, உளுந்து, பாசிப்பயறு, நிலக்கடலை மற்றும் அவரை பயிர் செய்யலாம்.

நீர்ப்பாசனம் : நட்ட பின் 2–3 நாட்கள் இடைவெளியிலும், பின்னர் 4 – 5 நாட்கள் இடைவெளியில்நீர் பாசனம் செய்ய வேண்டும்.

மேலுரம் : மானாவாரி நிலத்தில், கனஜீவாமிர்தம் ஓர் ஏக்கருக்கு 100 கிலோ மழை பெய்த ஈரத்தில் 30வது நாள் இடவேண்டும். 40 வது நாளில் ஜீவாமிர்தம் 30

லிட்டரை 200 லிட்டர் தண்ணீரில் கரைத்து மேலுரமாக கொடுக்க வேண்டும்.

பயிர் பாதுகாப்பு: 50வது நாள் பூச்சி விரட்டி 700 மில்லியை 10 லிட்டர் தண்ணீரில் கரைத்து 8 – 10 டேங்க் தெளிக்க வேண்டும். 60 வது நாள்பஞ்சகவ்யா மற்றும் பூச்சி விரட்டியை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து 8 – 10 டேங்க் தெளிக்க வேண்டும். (பஞ்சகவ்யா 200 மில்லி மற்றும் பூச்சி விரட்டி 500 மில்லி)

அறுவடை: பயிரிட்டு 95– 120 நாட்களில் ரகங்களுக்கு ஏற்றபடி வளர்ச்சி அடைந்து அறுவடைக்கு தயாராகி விடும்.

விளைச்சல்: மானாவாரியில் 5 – 6 குவிண்டால், நீர்பாசனத்தில் 12 முதல் 15 குவிண்டால் ரகங்களுக்கு ஏற்றபடி விளைச்சல் கிடைக்கும்.

**3. நிலக்கடலை சாகுபடி**

பட்டம் : வைகாசி, ஆடி, கார்த்திகை, தை

விதைப்பு : விதை அளவு ஓர் ஏக்கருக்கு 35–40 கிலோ.

இடைவெளி: கொத்து வகைகளுக்கு 30 –20 செ.மீ. மற்றும் படரும் வகைகளுக்கு 50 – 20செ.மீ. இடைவெளியில் இருக்க வேண்டும்.

உழவு: நிலத்தில் ஆறு வண்டி மக்கிய தொழு உரம் சேர்த்து உழுதல் வேண்டும். கடைசி உழவின் போது வேப்பம் புண்ணாக்கு 50 கிலோ இட்டு உழுதல் வேண்டும்.

விதை நேர்த்தி: 40 கிலோ விதைக்கு 200 கிராம் ரைசோபியம் உயிர் உரம் பயன்படுத்த வேண்டும். அரை லிட்டர் ஆறிய கஞ்சியுடன் 200 கிராம் ரைசோபியம் கலந்து விதைகளின் மேல் தெளிக்க வேண்டும். பின்னர், அவற்றை கைகளால் நன்றாக கலந்து அரை மணி நேரம் நிழலில் உலர்த்திய பின் விதைத்தல் வேண்டும். ட்ரைக்கோ டெர்மா விரிடி பூஞ்சாணத்தை 40 கிலோ விதைக்கு 200 கிராம் பூஞ்சாணப்பொடி அளவில் பயன்படுத்தி இதே முறையில் விதை நேர்த்தி செய்யலாம்.

ஊடு பயிர்: தினை, சாமை, வரகு, கம்பு, ஆமணக்கு பருத்தி போன்ற பயிர்களுடன் கலப்பு பயிராக நிலக்கடலையை பயிர் செய்யலாம்.

அடி உரம்: விதைத்த 15வது நாள் 150 மி.லி மீன்அமிலத்தை 10 லிட்டர் தண்ணீரில் கரைத்து மேலுரமாக தெளிக்க வேண்டும். 30வது நாள் ஜீவாமிர்தம் 30 லிட்டரை 200 லிட்டர் தண்ணீரில் கரைத்து மேலுரமாக கொடுக்க வேண்டும். 50வது நாள் புண்ணாக்கு கரைசல் 30லிட்டரை 200 லிட்டர் தண்ணீரில் கரைத்து தெளிக்க வேண்டும்.

பயிர் பாதுகாப்பு: 15வது நாள் பூச்சி விரட்டி 700 மில்லியை 10 லிட்டர் தண்ணீரில் கரைத்து தெளிக்க வேண்டும். பஞ்சகவ்யா மற்றும் பூச்சி விரட்டியை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். (பஞ்சகவ்யா – 200 மில்லி மற்றும் பூச்சி விரட்டி – 500 மில்லி)

அறுவடை: பயிரிட்டு 120 நாட்களில் நிலக்கடலை வளர்ச்சி அடைந்து விடும்.

விளைச்சல்: ஏக்கருக்கு ஐந்து டன் விளைச்சல் கிடைக்கும்.

**4. காய்கறி சாகுபடி**

பட்டம்: ஆடி, தை

உழவு: ஏழு வண்டி மக்கியதொழு உரத்தை நிலத்திலிட்டு உழுதல் வேண்டும். பல தானிய வகைகளான கம்பு, சோளம், மக்காச்சோளம், சாமை, தினை, வரகு, குதிரைவாலி, கடுகு, வெந்தயம், கொத்தமல்லி, சோம்பு, சணப்புபயிறு, கொழுஞ்சி, தக்கைப்பூண்டு, சூரியகாந்தி, அவுரி, அகத்தி, சித்தகத்தி, எள், நிலக்கடலை, சோயாபயிறு, பாசிப்பயிறு, தட்டப்பயிறு, உளுந்து, கொள்ளு, துவரை, நரிப்பயிறு ஆகியவற்றின் விதைகளை கலந்து (25 கிலோ) நிலத்தில் விதைத்து 45வது நாள் மடக்கி உழுதல் வேண்டும்.

விதைப்பு: விதை அளவு (ஏக்கருக்கு):

தக்காளி – அரை கிலோ, கத்தரி – ஒரு கிலோ, மிளகாய் – ஒரு கிலோ, வெண்டை – 8 கிலோ.

மேலுரம்: 2 லிட்டர் மீன் அமிலத்தை 200 லிட்டர் தண்ணீரில் கரைத்து தெளிக்க வேண்டும். 30 லிட்டர் ஜீவாமிர்தத்தை 200 லிட்டர் தண்ணீரில் கரைக்க வேண்டும். 30 லிட்டர் அமிர்தக்கரைசலை 200 லிட்டர் தண்ணீரில் கரைக்க வேண்டும். மூன்றையும் பத்து நாள் இடைவேளையில் தெளிக்க வேண்டும்.

களை எடுத்தல்: வாரம் ஒரு முறை ஆட்கள் மூலம் களை எடுத்தல் வேண்டும்.

பயிர் பாதுகாப்பு: புண்ணாக்கு கரைசலை 200 லிட்டர் தண்ணீரில் கரைத்து பத்து நாட்கள் இடைவேளையில் தெளிக்க வேண்டும். பூக்கும் நேரத்தில் ஒரு ஏக்கருக்கு ஒரு கிலோ பெருங்காயத்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்தல் வேண்டும். விதைத்த 15 நாட்களுக்குப் பிறகு வரும் முதல் வாரத்தில் பூச்சி

விரட்டி 200 மில்லி 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். இரண்டாவது வாரம் 300 மில்லி பஞ்சகவ்யா 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். மூன்றாவது வாரம் பூச்சி விரட்டி மற்றும் பஞ்சகவ்யா சேர்த்து தெளிக்கவும். (பஞ்சகவ்யா –200 மி.லி. பூச்சி விரட்டி–500 மி.லி. 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்). நான்காவது வாரம் மீன்அமிலம் 100 மி.லி 150 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். மேலும் வரும் வாரங்களில் சுழற்சி முறையில் இவை அனைத்தையும் தெளித்தல் வேண்டும்.

விளைச்சல்: ஒரு ஏக்கருக்கு தக்காளி –12 டன், கத்திரி – 11 டன், வெண்டை –3.2 டன், மிளகாய் – 4 டன். என்ற அளவில் மகசூல் கிடைக்கும்

**5. தர்பூசணி சாகுபடி**

பட்டம்: சித்திரை உழவு: நிலத்தை 3–4 முறை நன்கு உழவு செய்யவேண்டும். கடைசி உழவின் போது ஹெக்டருக்கு 30 டன் மக்கிய தொழு உரமிட்டு மண்ணுடன் கலந்து விடவேண்டும்.

விதைப்பு: ஏக்கருக்கு 11/2 கிலோ விதை தேவைப்படும். விதைகளை ஒரு 8 அடி அகல பார் அமைத்து பார்களுக்கு இடையில் வாய்க்கால் அமைக்க வேண்டும். வாய்க்கால் ஒட்டி மூன்று அடி இடைவெளியில் விதைகளை ஊன்ற வேண்டும். குழி ஒன்றுக்கு 2 – 3 விதைகளை பின்னர் முளைத்து வந்தவுடன் குழிக்கு 2 செடிகள் இருக்குமாறு களைத்து விடவேண்டும்.

நீர்பாசனம்: விதைகளை ஊன்றும் முன் நீர் பாசனம் செய்ய வேண்டும். பின்னர் வாரம் ஒரு முறை நீர் பாய்ச்ச வேண்டும். சொட்டு நீர் பாசனம் அமைப்பது நீர் பயன்பாட்டை சிக்கனமாக்கி நிறைவான மகசூலை பெறவும் உதவும்.

மேலுரம்: ஜீவாமிர்தம் பத்து நாளைக்கு ஒருமுறை பாசனநீரில் கொடுக்க வேண்டும். (ஜீவாமிர்தம் 30 லிட்டரை 200 லிட்டர் நீரில் கரைத்து நீர் பாய்ச்ச வேண்டும்). காயின் எடை அதிகரிப்பதற்கு பஞ்சகவ்யா ஏக்கருக்கு 20 லிட்டர் கொடுக்கலாம் (200 மி.லி. பஞ்சகவ்யா 10 லிட்டர் நீரில் கலந்து கொடுக்கலாம்).

களை எடுத்தல்: விதைத்த 15 மற்றும் 30ஆம் நாட்களில் களைக்கொத்தி கொண்டு கொத்தி விட்டு களை நீக்கம் செய்யவேண்டும்.

பயிர் பாதுகாப்பு: நடவு செய்த 20வது நாளிலிருந்து பூச்சிவிரட்டியை 5 நாட்களுக்கு ஒரு முறை 700 மில்லியை 10 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

அறுவடை: விதைத்த நாளிலிருந்து 55–90 நாட்கள் அறுவடைக்கு தயாராகும். சில ரகங்கள் 80–110 நாட்கள் வரை ஆகலாம்.

விளைச்சல்: ஓர் ஏக்கருக்கு 10 – 12 டன் விளைச்சல் கிடைக்கும்.

**6. பருத்தி சாகுபடி**

பட்டம்: ஆடி பட்டம்.

உழவு: நிலத்தை 3 – 4 முறை நன்கு உழுதல் வேண்டும். பின்னர் வேப்பம் புண்ணாக்கு 100 கிலோ, ஆமணக்கு புண்ணாக்கு 50 கிலோ, கொட்டைப் புண்ணாக்கு 100 கிலோ, கடலைப் புண்ணாக்கு 25 கிலோ இடவேண்டும்.

விதைப்பு: நிலத்தில் பாத்தி கட்டிய பின் விதைகளை விதைக்க வேண்டும். ஓர் ஏக்கருக்கு 35 கிலோ விதைகள் தேவைப்படும். இடைவெளி: 75 –15 செ.மீ.

ஊடுபயிர்: பச்சைப்பயறு, கருப்பு உளுந்து, சோளம், நிலக்கடலை, சோயா பீன்ஸ் இவற்றை ஊடு பயிராக பயிரிடலாம்.

களை எடுத்தல்: நடவு செய்த பின்15 நாட்களுக்கு ஒரு முறை களை எடுக்க வேண்டும்.

பயிர் பாதுகாப்பு மற்றும் மேலுரம் இடுதல்: விதைத்த 15வது நாளில் பூச்சி விரட்டி 700 மில்லியை 10 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும், பூச்சி விரட்டி தெளித்த 15 நாட்களுக்கு பிறகு பஞ்சகவ்யா 300 மில்லியை 10 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும். பஞ்சகவ்யா தெளித்த 15 நாட்களுக்கு பிறகு மீன் அமிலம் 1 ½ லிட்டரை 10 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும். இவ்வாறு தொடர்ந்து காய் காய்க்கும் வரை 15 நாள் இடைவெளியில் சுழற்சி முறையில் தெளிக்க வேண்டும். இதனால் காய்ப்புழுக்களின் தாக்கம் மற்றும் பூஞ்சை நோயின் தாக்கம் குறைகிறது.

விளைச்சல்: ஓர் ஏக்கருக்கு 400 – 500 கிலோ பருத்தி கிடைக்கும்.

**7. இயற்கை வாழை சாகுபடி**

பட்டம்: ஐப்பசி, கார்த்திகை பட்டம்.

உழவு: நிலத்தை இரண்டு முறை நன்கு உழவு செய்ய வேண்டும்.

அடி உரம்: ஒரு ஏக்கருக்கு தொழுஉரம் 6–7 டிராக்டர் லோடு இட வேண்டும்.

நடவு : ஒரு ஏக்கருக்கு 1000–1100 வாழைக் கன்றுகள்

தேவைப்படும். பஞ்சகவ்யா 1 லிட்டரை 100 லிட்டர் தண்ணீரில் கலக்க வேண்டும். இதில் வாழைக்கன்றுகளை முழுதாகவோ அல்லது வேர்ப்பகுதி படும்படி சில நிமிடங்கள் நனைத்து பின்பு நடவு செய்ய வேண்டும்.

இடைவெளி : 6 X 6அடி என்ற இடைவெளியில்

1.5 X 1 .5X1.5 அடி குழி எடுத்து கன்றுகளை நடவு செய்யவேண்டும்.

களை எடுத்தல்: நடவு செய்த 15வது நாள் முதல் களையெடுக்கவும். இதை தொடர்ந்து ஓர் ஏக்கருக்கு 25 கிலோ கொள்ளு அல்லது நரிப்பயிரை வாழைக்கு இடையில் விதைக்கவேண்டும். 45 நாட்களுக்கு பின்னர் செடிகளை வெட்டி மண்ணில் புதைக்க வேண்டும். அல்லது காராமணி வாழை நட்ட 2 மதங்களில் வாழைக்கு இடையில் 20 கிலோ விதைக்கலாம். இரு முறை காய் பறித்து பின்னர் அப்படியே மக்க விடலாம். இதனை போடுவதால் மூடாக்காக அமைகிறது. இதனால் களை கட்டுப்படுத்த முடிகிறது.

பயிர் பாதுகாப்பு : நடவு செய்த 20வது நாளில் மீன் அமிலக்கரைசல் 2 லிட்டரை 200 லிட்டர் நீரில் கலந்து வாழைக்கன்றில் தெளிக்க வேண்டும்.

நடவு செய்த 40 வது நாளில் ஜீவாமிர்தம் 30 லிட்டரை 200 லிட்டர் நீரில் கலந்து நீர் பாய்ச்ச வேண்டும். நடவு செய்த 60வது நாள் புண்ணாக்கு கரைசல் 50 லிட்டரை 200 லிட்டர் நீரில் கலந்து நீர் பாய்ச்ச வேண்டும். நடவு செய்த 80வது நாளில் அமிர்தக் கரைசல் 30 லிட்டரை 200 லிட்டர் நீரில் கலந்து நீர் பாய்ச்ச வேண்டும். நடவு செய்த 100 வது நாளிலிருந்து 240 வது நாள் வரை பூச்சிவிரட்டி மற்றும் பஞ்சகவ்யத்தை 20 நாட்களுக்கு ஒரு முறை தெளிக்க வேண்டும். நூற்புழுக்களை கட்டுப்படுத்துவதற்கு 90 வது மற்றும் 200 வது நாளில் ஒரு ஏக்கருக்கு 1 கிலோ பெருங்காயத்தை 200 லிட்டர் நீரில் கரைத்து நீர் பாய்ச்ச வேண்டும்.

வாழை வாடல் நோய்க்கு: வாழை மரத்திற்கு பணமா வாடல் நோயினால் சேதம் ஏற்படும். குலை சிறுத்து அல்லது வராமல் இருந்து விடும். இதற்கு 2 – 5 லிட்டர் ஜீவாமிருதம் கரைசலை ஒரு வாழை மரத்திற்கு 15 நாள் இடைவெளியில் இரண்டு தடவை ஊற்ற வேண்டும்.

பக்கக் குருத்துகள் அகற்றுதல்: பக்கக் குருத்துகள் வருவதினால் வாழையின் விளைச்சல் மற்றும் வளர்ச்சி குறையும். இதனால் அதனை தவிர்க்க மூன்று முதல் ஆறு மாதத்திற்குள் பக்க கன்றுகளை அகற்ற வேண்டும்.

விளைச்சல்: வாழையின் ரகத்தைப் பொறுத்து 25 முதல் 45 டன் விளைச்சல் கிடைக்கும். பொதுவாக ஒரு தாரின் எடை 25 – 30 கிலோ வரை இருக்கும். ரகத்திற்கு ஏற்ப தாரின் எடை மாறும்.

**8. இயற்கை பூ சாகுபடி**

பட்டம்: தை, வைகாசி, ஆடி, கார்த்திகை பட்டம்.

உழவு: நிலத்தை மூன்று முதல் நான்கு முறை கட்டிகள் இல்லாதவாறு நன்கு உழ வேண்டும்.

அடி உரம்: ஓர் ஏக்கருக்கு மக்கிய தொழு உரம் எட்டு டிராக்டர் இடவேண்டும். வேப்பம் புண்ணாக்கு 100 கிலோ இட வேண்டும்.

விதைப்பு: நிலத்தில் பாத்தி அமைக்க வேண்டும். பின்பு செடிகளை (நாத்து, கிழங்கு) நட வேண்டும். விதைகளாக இருந்தால் நிலத்தில் விதைக்க வேண்டும். பொதுவாக பூச்செடிகளுக்கு 1 ½ X 1 ½ அடி இடைவெளி விட வேண்டும் (மல்லி, ஜாதி முல்லை).

மேலுரம்: மாதம் ஒரு முறை கடலைப்புண்ணாக்கு 25 கிலோ, ஆமணக்குப் புண்ணாக்கு 50 கிலோ மற்றும் வேப்பம் புண்ணாக்கு 50 கிலோ இவை அனைத்தையும் சேர்த்து மேலுரமாக தூவி வைக்கவேண்டும். நட்ட ஒரு மாதம் கழித்து இயற்கை தயாரிப்புகளை 15 நாட்கள் இடைவெளியில் பின்வருமாறு பயன்படுத்த வேண்டும். ஏக்கருக்கு இரண்டு லிட்டர் மீன் அமிலத்தை 200 லிட்டர் நீரில் கரைத்து தெளிக்க வேண்டும் . ஜீவாமிர்தம் 30 லிட்டரை 200 லிட்டர் நீரில் கரைத்து நீர் பாய்ச்ச வேண்டும் . அமிர்தக்கரைசல் 30 லிட்டரை 200 லிட்டர் நீரில் கரைத்து பாய்ச்ச வேண்டும். புண்ணாக்கு கரைசல் 50 லிட்டரை 200 லிட்டர் நீரில் கரைத்து நீர் பாய்ச்ச வேண்டும். பத்து நாள் இடைவெளியில் கொடுக்க வேண்டும்.

பூச்சி விரட்டி: 700 மில்லி பூச்சிவிரட்டியை 10 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும். (ஓர் ஏக்கருக்கு 7 லிட்டர் பூச்சிவிரட்டி தேவைப்படும்).

மொட்டுக்களின் அளவு அதிகரித்தல் அல்லது விளைச்சல் அதிகரித்தல்: ஓர் ஏக்கருக்கு பெருங்காயம் ஒரு கிலோவை 200 லிட்டர் தண்ணீரில் கரைத்து நீர் பாய்ச்ச வேண்டும். இதனால் மொட்டுக்களின் அளவு அதிகரிக்கும். மற்றும் பெருங்காயத்தின் கசப்புத்தன்மை பூச்சிகளை விரட்டும். வேர்ப் புழுக்களை அழிக்கும்.

பயிர் பாதுகாப்பு: செடிகளை பூச்சி தாக்குதலில் இருந்து பாதுகாப்பதற்கு ஓர் ஏக்கருக்கு பூச்சிவிரட்டி 7 லிட்டர், பஞ்சகவ்யம் 3 லிட்டர் மற்றும் மீன்அமிலம் 1.5 லிட்டர் தெளிக்க வேண்டும். பூச்சிவிரட்டி மற்றும் பஞ்சகாவியம் சரிவிகித அளவில் (250 மில்லி + 250 மில்லி) எடுத்து 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். இதனை அனைத்து பூச்செடிகளுக்கும் ஐந்து நாள் இடைவெளியில் தெளிக்க வேண்டும்.

கிளை கத்தரித்தல்: செடியின் வளர்ச்சி காலத்தில் நுனிக்கிளைகளை கத்தரிப்பதால் அரும்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கிறது.மேலும் அறுவடைக்குப் பின்னர் அடித்தண்டிலிருந்து 1 ½ அடியை விட்டு விட்டு இதர கிளைகளை கத்தரித்து அகற்றுதல் வேண்டும்.

**9.இயற்கை திராட்சை சாகுபடி**

உழவு : நிலத்தை இரண்டு முறை உழவு செய்ய வேண்டும். மக்கிய தொழு உரம் 5 டிராக்டர் அளவு, கடலை பிண்ணாக்கு 25 கிலோ, வேப்பம் பிண்ணாக்கு 100 கிலோ, ஆமணக்கு பிண்ணாக்கு 50 கிலோ, ஆகியவற்றை கலந்து நிலத்தில் இடவேண்டும்.

விதைப்பு:

விதைக்குச்சிகள் 4 X 3 மீட்டர் என்ற இடைவெளியில் நடவு செய்ய வேண்டும்.

உரம்:

திராட்சைப் பயிரானது பந்தலில் கொடியாக ஏறியதற்கு பிறகு 15 நாட்களுக்கு ஒரு முறை கீழ்க்கண்ட உரங்களை சுழற்சி முறையில் தெளிக்க வேண்டும்.

1. ஒரு ஏக்கருக்கு பிண்ணாக்கு கரைசல் 30 லிட்டரை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.
2. மீன் அமிலத்தை 150 மி.லி 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.
3. ஜீவாமிர்தம் 30 லிட்டரை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.
4. அமிர்தகரைசல் 30 லிட்டரை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

பயிர் பாதுகாப்பு:

கீழ்கண்ட கரைசல்களை ஒரு வருடத்திற்குப் பிறகு 15 நாட்கள் இடைவெளியில் சுழற்சி முறையில் தெளிக்க வேண்டும்.

1. பஞ்சகவ்யா 350 மி.லி 10 லிட்டர் தண்ணீரில் கரைத்து தெளிக்க வேண்டும்.
2. பூச்சி விரட்டி 700 மி.லி 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.
3. மீன் அமிலம் 150 மி.லியை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.
4. இஞ்சி பூண்டு கரைசல் 500 மில்லியை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

விளைச்சல்:

திராட்சைக்கொடி மூன்று வருடங்களுக்கு நல்ல விளைச்சலை கொடுக்கும். பொதுவாக 4 டன் விளைச்சல் கிடைக்கும்.

**10. இயற்கை பப்பாளி சாகுபடி**

பட்டம்: ஆடி பட்டம்.

உழவு: நிலத்தை 2 முறை நன்கு உழ வேண்டும்.

விதைப்பு:

ஒரு எக்டேருக்கு 500 கிராம் விதைகள் தேவைப்படும். மழைக்காலத்தில் நடவு செய்வதை தவிர்க்க வேண்டும். ஒரு பாலித்தின் பையில் 4–5 விதைகள் வீதம் விதைக்க வேண்டும். மழைக்காலத்தில் நடவு செய்வதை தவிர்க்க வேண்டும்.

நடவு:

நாற்றுகளை சுமார் 3 அடி உயரம் வளர்ந்த பின்னர் எடுத்து குழியில் நட வேண்டும். குழியின் அளவு 45X 45X 45 செண்டிமீட்டர் விட வேண்டும்.

அடி உரம்: ஒரு ஏக்கருக்கு மக்கிய தொழு உரம் 5 டிராக்டர் அளவு இடவேண்டும். வேப்பம் பிண்ணாக்கு100 கிலோ, கடலை பிண்ணாக்கு 25 கிலோ, ஆமணக்கு பிண்ணாக்கு 50 கிலோ இட வேண்டும்.

சத்துக் குறைபாட்டை தவிர்க்க: நாற்று நட்ட சில நாட்களில் சத்து குறைபாடு ஏற்படும். அதனை தவிர்க்க நாற்று நட்ட 15 வது நாளில் மீன் அமிலம் 2 லிட்டரை 200 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

மேல் உரம்: 15 நாள் இடைவெளியில் பூச்சி விரட்டி 700 மில்லியை 10 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும். பொதுவாக பஞ்சகவ்யத்தை இலை வழியாக பயிருக்கு தெளிக்க கூடாது. ஏனென்றால் இலை கருகிவிடும்.

மாவு பூச்சியை கட்டுப்படுத்தல்:மாவு பூச்சியை கட்டுப்படுத்த பூச்சி விரட்டி 700 மில்லியை 10 லிட்டர் நீரில் கலக்க வேண்டும். மற்றும் இதோடு 100 கிராம் மிளகாயை அரைத்து கலந்து தெளிக்க வேண்டும். இதனால் மாவு பூச்சியை கட்டுப்படுத்தலாம்.

விளைச்சல்: ஒரு ஏக்கருக்கு 30–60 டன்கள் வரை கிடைக்கும்.

**11. இயற்கை பழ மரங்கள் சாகுபடி**

உழவு: நிலத்தை 2–3 முறை கட்டிகள் இல்லாதவாறு உழ வேண்டும்.

அடி உரம்: ஓர் ஏக்கருக்கு மக்கிய தொழு உரம் 6 லோடு டிராக்டர் இடவேண்டும்.

பூப்பூக்கும் காலத்திற்கு முன்பாக ஒரு வருடத்திற்கு மக்கிய தொழு உரம் 2 கூடையை வேர்ப்பகுதியில் இடவேண்டும்.

மேல் உரம்: 1. பூ எடுத்ததற்கு முன் பஞ்சகவ்யா 300 மில்லியை 10 லிட்டர் நீரில் கலந்து ஒரு முறை தெளிக்க வேண்டும்.

2. பூ எடுத்ததற்கு பின் பூச்சிவிரட்டி 700 மில்லியை 10 லிட்டர் நீரில் கலந்து ஒரு முறை தெளிக்க வேண்டும்.

பிஞ்சு உதிர்வதை தவிர்க்க: பிஞ்சுகள் பட்டாணி அளவு அடையும் போது ஒருமுறை பூச்சிவிரட்டி 700 மில்லியை 10 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

பின்னர் 15 நாட்கள் கழித்து பஞ்சகவ்யா 300 மில்லி மற்றும் பூச்சிவிரட்டி 700 மில்லியை 10 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும். இவற்றை கலந்து தெளிப்பதால் பிஞ்சு உதிர்வை தவிர்க்கலாம்.

பயிர் பாதுகாப்பு: மாதம் ஒருமுறை பூச்சிவிரட்டி 700 மில்லியை 10 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும். பின்னர் 15 நாட்களுக்கு பிறகு ஒரு முறை பஞ்சகவ்யம் 300 மில்லியை 10 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும். பூப்பூக்கும் காலத்தில் ஜீவாமிர்தம் 30 லிட்டரை 200 லிட்டர் நீரில் கலந்து நீர் பாய்ச்ச வேண்டும். ஜீவாமிர்தம் தெளித்த 20 வது நாட்களுக்கு பின்னர் பிண்ணாக்கு கரைசல் 50 லிட்டரை 200 லிட்டர் நீரில் கலந்து நீர் பாய்ச்ச வேண்டும். பிண்ணாக்கு கரைசல் கொடுத்த 20 வது நாட்களுக்கு பின்னர் மீன்அமிலக்கரைசல் 2 லிட்டரை 200 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

மீன்அமிலக்கரைசல் கொடுத்த 20 வது நாட்களுக்கு பின்னர் அமிர்த கரைசல் 30 லிட்டரை 200 லிட்டர் நீரில் கலந்து நீர் பாய்ச்ச வேண்டும்.

இவ்வாறு தொடர்ந்து 20 நாட்களுக்கு ஒருமுறை சுழற்சிமுறையில் கொடுக்க வேண்டும்.

பழத்தின் அளவு மற்றும் சுவையை அதிகரிக்க:

பழத்தின் அளவு மற்றும் சுவையை அதிகரிக்க, பூ பூத்த பிறகு பஞ்சகவ்யம் 300 மில்லியை 10 லிட்டர் நீரில் கலந்து 3– 4 முறை 15 நாள் இடைவெளியில் தெளிக்க வேண்டும்.

கவாத்து செய்தல் (கிளை கத்தரித்தல்):

பொதுவாக ஆகஸ்ட் மாதத்தில் நுனிக் கிளைகளை கத்தரிக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் பழத்தின் எண்ணிக்கை கூடும் மற்றும் விளைச்சல் அதிகரிக்கும்.

விளைச்சல்: ஓர் ஏக்கருக்கு, மாமரம் மற்றும் கொய்யா மரத்திலிருந்து 6–8 டன் வரை விளைச்சல் கிடைக்கும்.

**12. இயற்கை மஞ்சள் சாகுபடி**

பட்டம் : வைகாசி – ஆடி வரை

உழவு : நிலத்தை 4 முறை உழவு செய்ய வேண்டும். உழவுசெய்த பின் ஏக்கருக்கு பல தானியப்பயிர் 25 கிலோ விதைக்க வேண்டும். சணப்பை, தக்கைப்பூடு, எண்ணை வித்து பயிர், தானிய விதை, வாசனைத்திரவியம் போன்றவைகளை ஒவ்வொன்றும் சுமார் ஒரு கிலோ அளவு (விலை அதிகமாக இருந்தால் அரைக்கிலோ போதுமானது) எடுத்துக்கொண்டு மொத்தம் 25 கிலோ அளவுக்கு கலந்து விதைக்க வேண்டும். இவை முளைத்த 45 வது நாளில் மடக்கி உழுது உரமாக்கலாம்.

**அடிஉரம் :**

ஒரு ஏக்கருக்கு 10 டன் (சுமார் எழு டிராக்டர்) மக்கிய தொழு உரம் இட வேண்டும். பின்பு பாத்தி கட்டி மஞ்சள் விதை கிழங்கு நடவு செய்ய வேண்டும். அடியுரமாக 100 கிலோ வேப்பம் புண்ணாக்கு தூள் இடலாம்.

**விதைப்பு :** 1500 கிலோ விதை மஞ்சள் தேவைப்படும்.

இடைவெளி: வரிசைக்கு வரிசை முக்கால் அடி மற்றும் வரிசைக்கு அரைஅடி அளவு இடைவெளி இருக்க வேண்டும்.

**ஊடுபயிர் சாகுபிடி :**

ஊடுபயிராக செம்மாந்தழை (சித்தகத்தி) விதை ஓர் ஏக்கருக்கு 3/4 கிலோ தேவைப்படும். சின்ன வெங்காயம் அல்லது மக்காச்சோளம் பயிர் செய்யலாம். ஒரு அடி இடைவெளியில் நடவேண்டும். வெங்காயம் ஊடு பயிராக பயிர் செய்யும் சமயம் 400 கிலோ விதைக்காய் தேவைப்படும். மக்காச்சோளஊடுபயர் சாகுபடிக்கு ஏக்கருக்கு 3 கிலோ விதை போதுமானது.

நீர்பாய்ச்சுதல் : 4 நாட்களுக்கு ஒரு தடவை நீர் பாய்ச்சுதல் வேண்டும்.

களையெடுத்தல் : நடவு செய்த 15 வது நாள் முதல் களை எடுக்க வேண்டும். பின்னர்15 நாள் இடைவெளியில் களையெடுப்பு செய்ய வேண்டும். 4 முறை களை எடுக்க வேண்டும்.

மேலுரம் இடுதல்: நட்ட 15 வது நாளில் 30 லிட்டர் ஜீவாமிருதத்தை 200 லிட்டர் நீரில் கலந்து பயன்படுத்தலாம். பின்னர் 35 வது நாளில் மீன் அமினோ அமிலம் 2 லிட்டரை 200 லிட்டர் நீரில் கலந்து நீர் பாய்ச்ச வேண்டும். 50வது நாளில் 7வகை புண்ணாக்கு கரைசல் 30 லிட்டர் நீரில் கலந்து வயலில் பாய்ச்ச வேண்டும். 70 வது நாளில் அமிர்தக்கரைசல் ஏக்கருக்கு 30 லிட்டர் நீரில் கலந்து பாய்ச்ச வேண்டும். மேற்கண்ட முறையில் மீண்டும் இதே முறையில் கீழ்க்கண்ட நாட்களில் கடைபிடிக்கலாம். அதாவது 90வது நாளில் ஜீவாமிருதம் 30 லிட்டர், 110 வது நாளில் மீன் அமினோஅமிலம் 2 லிட்டர், 130 வது நாளில் புண்ணாக்கு கரைசல் 30 லிட்டர், 150 வது நாளில் ஜீவாமிருதம் 30 லிட்டர், 170 வது நாளில் மீன் அமினோஅமிலம் 3 லிட்ட, 190 வது நாளில் புண்ணாக்கு கரைசல் 30 லிட்டர் பயன்படுத்தலாம்.

**பயிர் பாதுகாப்பு :**

நடவு செய்த 15 வது நாள் ஏக்கருக்கு 7 லிட்டர் பூச்சிவிரட்டி கரைசலை 120 லிட்டர் நீரில் கலந்து விசைத் தெளிப்பான் மூலம் 10 டேங்க் தெளிக்கலாம். 30 வது நாளில் பஞ்சகவ்யா 3 லிட்டர் கரைசலை 120 லிட்டர் நீரில் (10 டேங்கில்) கலந்து விசைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும். 45 வது நாளில் மீன்அமீனோ அமிலம் 1.5 லிட்டரை 120 லிட்டர் நீரில் கலந்து (10 டேங்க்) தெளிக்க வேண்டும். 60 வது நாளில் இஞ்சி பூண்டு மிளகாய்க்கரைசல் 7 லிட்டரை 120 லிட்டர் நீரில் (10 டேங்க்) விசைத் தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். 75 வது நாளில் பஞ்சகவ்யாவுடன் பூச்சி விரட்டி கலந்து (2 லிட்டர் பஞ்சகவ்யா + 5 லிட்டர் பூச்சி விரட்டி) 120 லிட்டர் நீரில் அதாவது 10 டேங்கில் கலந்து தெளிக்க வேண்டும். 90 வது நாளில் பூச்சி விரட்டி, 105 வது நாளில் பஞ்சகவ்யா, 120 வது நாளில் மீன் அமினோஅமிலம், 135 வது நாளில் இஞ்சி பூண்டு மிளகாய் கரைசல், 150 வது நாளில் பூச்சிவிரட்டி மற்றும் பஞ்சகவ்யா, 165 வது நாளில் பூச்சிவிரட்டி, 180 வது நாளில் பஞ்சகவ்யா பயன்படுத்தலாம்.

**வேரழுகல், நூற்புழுக்களை கட்டுப்படுத்துதல்:**

90 வது நாள் மற்றும் 150 வது நாளில் பெருங்காயம் 1 கிலோவை சாக்கில் வைத்து வாய்க்கால் வாமடையில் வைத்து விட வேண்டும். இதனால் இது நீரில் கலந்து பயிருக்குச் சென்று சேரும். இம்முறையால் அழுகல் நோய், நூற்புழுக்களைக் கட்டுப்படுத்தலாம்.

அறுவடை : 7–8 மாதங்களில் மாசி–சித்திரை மாதங்களில் அறுவடை செய்ய வேண்டும்.

விளைச்சல் : முதல் வருடம் 30 குவிண்டால் / ஏக்கருக்கு மகசூல் கிடைக்கும். (முதல் அறுவடை முடிந்த பின் பல தானியப்பயிர், பசுந்தாள் உரப் பயிர்களான கொள்ளு, தக்கைப்பூண்டு 25 கிலோ விதைத்து நீர் பாய்ச்ச வேண்டும். 40 வது நாளில் மடக்கி உழுது விட வேண்டும்). 2 வது வருடம் 35 குவிண்டால் விளைச்சல், பின்னர் வரும் வருடங்களில் 40 குவிண்டால் மகசூளுக்கு குறையாமலிருக்கும்.

மஞ்சள் கிழங்கில் குர்குமின் அடர்த்தி 3.7 – 4.20 அளவில் காணப்படும். செயற்கை உரமிட்ட நிலங்களில் குர்குமின் அளவு 3 க்கும் குறைவாகவே இருக்கும்.

**13. முருங்கை சாகுபடி**

பட்டம் : சித்திரை, ஆடி

நடவு: முருங்கைசாகுபடி செய்வதற்கு செம்மண் நிலமே ஏற்றது. மூன்று அடி ஆழத்திற்கு குழி செய்து அதில் மக்கியத் தொழு உரம், அசோஸ்பைரிலம் 100 கிராம், பாஸ்போபேக்டீரியம் 50 கிராம், வேப்பம் பிண்ணாக்கு 50 கிராம் ஆகியவற்றை கலந்து போட்டு இரண்டு நாட்கள் ஆறவிட வேண்டும். பின்பு விண் பதியம மூலம் உற்பத்தி செய்யபட்ட முருங்கை கன்றினை நடவு செய்யவேண்டும். இக்கன்றுகள் முளைத்து 20 வருடங்களுக்கு குறையாமல் வருடம் முழுவதும் விளைச்சல் தரும்.

இடைவெளி: மரத்திற்கு மரம் 20 அடி வீதம் இடைவெளி விட வேண்டும். காற்று அடிக்கும் காலங்களில் மரம் சாயாமல் இருக்க ஒரு கன்றிலிருந்து 3 அடி தூரத்தில் மற்றொரு கன்று நடவு செய்யலாம். இதனால் மரங்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து சாயாமல் இருக்கும்.

நீர்ப்பாசனம் : மானாவாரி நிலத்தில் 15 நாட்களுக்கு ஒரு முறை நீர் பாய்ச்சினால் போதுமானது.

பயிர் பாதுகாப்பு: பூச்சிகளில் இருந்து முருங்கை கன்றை பாதுகாக்க புங்கை எண்ணெய் 30 மில்லி, வேப்ப எண்ணெய் 30 மில்லி ஆகியவற்றுடன் காதி சோப்பு கரைசல் 10 மில்லி சேர்த்து ஒரு டேங்கிற்கு அதாவது 10 லிட்டர் நீரில் கலந்து அடிக்கலாம்.

வளர்ந்த மரங்களில் பூச்சிகளின் தாக்கம் தெரிந்தால் 15 நாளைக்கு ஒரு முறை பூச்சி விரட்டி பயன்படுத்தவும் (700 மில்லியை 10 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க

வேண்டும்). காய் பிடிக்கும் சமயம் மூலிகை பூச்சி விரட்டி அடிக்க வேண்டும். இவ்வாறு ஒரு காய்ப்பு முடிந்ததும் மீண்டும் தொழுஉரம் போட்டு இயற்கை முறையில் பராமரிக்க வேண்டும்.

மேலுரம்: நட்ட நான்கு அல்லது ஐந்து மாதங்களில் பூ எடுக்கும் சமயம் பஞ்சகாவ்யா 100 மில்லி வீதம் ஒரு டாங்க்கு 10 லிட்டர் நீரில் கலந்து அடித்து விட வேண்டும். பஞ்சகவ்யா அடிப்பதன் மூலம் காய் மற்றும் பூக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். பஞ்சகவ்யாவுக்கு பதில் மக்கிய எரு ½ கிலோ, கோமியம் 5 லிட்டர், கிளிரிசிடியா ½ கிலோ, அகத்திக்கீரை ½ கிலோ, வண்டல் மண் ½ கிலோ எடுத்து அத்துடன் 10 லிட்டர் நீர் சேர்த்து 15 நாள் ஊற விட்ட பின் அத்துடன் 100 லிட்டர் நீர் சேர்த்து பயிருக்கு தெளிக்க வேண்டும்.

கவாத்து செய்வதல்: கன்றுகளை நட்ட நான்கு மாதத்திற்கு பிறகு நுனியில் இருந்து அரை அடி வெட்டி விட வேண்டும். வெட்டிய பகுதியில் சாணத்தை வைப்பதினால் நுனி காயாமலும், நோய் தாக்காமலும் மரங்கள் நன்கு வளர்கின்றன. இவ்வாறு 20 நாட்கள் இடைவெளியில் நான்கு முறை கவாத்து செய்ய வேண்டும்.

விளைச்சல்: நடவு செய்த 6 மாதத்தில் மரங்கள் விளைச்சல் தர ஆரம்பித்து விடும். தொடர்ந்து 20 வருடங்களுக்கு குறையாமல் வருடம் முழுவதும் விளைச்சல் தரும்.

விளைச்சல்: ஒரு வருடத்திற்கு 1 மரத்திலிருந்து 500 முதல் 1000 கிலோ வரை மகசூல் கிடைக்கும்.

**14. அமிர்தக்கரைசல் தயாரித்தல்**

தயாரிக்கத் தேவையானவை :

பசுஞ்சாணம் – 15 கிலோ, பசு கோமியம் 15 லிட்டர், வெல்லம் – 1.5 கிலோ.

தயாரிக்கும் முறை: முதலில் பசுஞ்சாணம் மற்றும் பசு கோமியம் (பசும் சாணம் புதியதாக இருத்தல் வேண்டும்) இரண்டையும் ஒரு பாத்திரத்தில் அல்லது வாளியில் ஒன்றாக பிசைந்து கொள்ள வேண்டும். இத்துடன் வெல்லத்தை தூள் செய்து சேர்க்க வேண்டும். இந்தக் கலவையை 2 நாட்கள் நிழலான இடத்தில் வைக்க வேண்டும். மேலும் அந்தக் கலவையில் கொசுக்கள் முட்டையிடுவதைத் தவிர்க்க பிளாஸ்டிக் அல்லது அட்டையை வைத்து மறைத்துக் கொள்ளலாம். இது ஓர் ஏக்கருக்கு ஒரு முறை பாசன நீரில் கலந்து விட போதுமானதாகும். இதனை பயிர்களுக்கு தெளிக்கும் சமயம் ஒரு பங்குக் கரைசலுடன் 10 பங்கு தண்ணீர் சேர்த்து பயிர்களுக்குத் தெளிப்பான் மூலம் தெளிக்கலாம். ஓர் ஏக்கருக்குப் பத்து தெளிப்பான் டேங்க் அளவுக்குத் தெளிக்கலாம். கை தெளிப்பான் கொண்டு தெளிப்பது நல்லது. இந்த அமிர்தக்கரைசலை நிலத்தில் தெளித்த 24 மணி நேரத்தில் நுண்ணுயிர்கள் பெருகும். பயிர்கள் நோய் இல்லாமல் வளர உதவும். பொதுவாக 10 – 15 நாட்களுக்கு ஒரு முறை இந்தக் கரைசலைப் பயன்படுத்தலாம். இதனை பயிருக்கு 90 நாட்கள் வரை உபயோகிக்கலாம்.

**15. பஞ்சகவ்யா தயாரிதல்**

பசுஞ்சாணம் – 5 கிலோ, நெய் – 1/2 கிலோ, பசு கோமியம் – 2 லிட்டர், பால் – 2 லிட்டர், தயிர் – 2 லிட்டர், வெல்லம் – 1/2 கிலோ, வாழைப்பழம் – 1 டஜன் (12 பழம்). முதலில் பசு சாணம், நெய் இரண்டையும் கலந்து 3 நாட்கள் கழித்த பின் மற்ற 4 பொருட்களையும் சேர்க்க வேண்டும். வெல்லத்தை 3 லிட்டர் நீரில் கலந்து சேர்க்க வேண்டும். பின்னர் அனைத்தையும் சேர்த்த கலவையை மேலும் 18 நாட்கள் (மொத்தம் 21 நாட்கள்) அப்படியே ஒரு டிரம்மில் வைத்து விட வேண்டும். இச்சமயத்தில் தினமும் 5 நிமிடம் நன்றாக குச்சியால் கலக்க வேண்டும். 21 நாட்கள் கழித்து பயிர் நிலங்களில் ஸ்பிரேயர் கொண்டு தெளிக்கலாம். ஒரு ஸ்பிரே டேங்கிற்கு அல்லது 10 லிட்டர் நீருக்கு 300 மி.லி. பஞ்சகவ்யா கலந்து தெளிக்கலாம். ஓர் ஏக்கருக்கு 3 லிட்டர் பஞ்சவ்யா கரைசல் தேவைப்படும். இதனை 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்கலாம். இதனை பூசணி, சுரைக்காய், பப்பாளி, தர்ப்பூசணி பயிர்களுக்கு தெளிக்க கூடாது. ஆனால் வேரில்/ மண்ணில் ஊற்றலாம். முருங்கைக்கு 10 லிட்டர் நீருக்கு 200 மி.லி பஞ்சகவ்யா கலந்துதெளிக்க வேண்டும்.

அழகர்சாமி, பள்ளபட்டி, திண்டுக்கல் மாவட்டம்

## கோயில்காடு, புல்வெளி பாதுகாப்பு கூட்டம்

மதுரை மாவட்டம், திருவாதவூர் அருகே உள்ள இடையபட்டி கிராமத்தில் வெள்ளை மலையாண்டி கோவிலை ஒட்டி சுமார் 1500 ஏக்கர் காடு இருந்ததாகக் கூறப்படுகிறது. இதில் கல்குவாரிகள், பிற பயன்பாட்டிற்கு விடப்பட்டதுபோக சுமார் 300 ஏக்கர் காடு மிஞ்சியுள்ளது. இதில் கடம்பமரம், தேத்தா

மரம், உசிலை, மரங்கள் உசிலை, கள்ளி போன்ற தாவரவகைகள் காணப்படுகிறது. தேவாங்கு, முள்ளெலி, புள்ளிமான், காட்டுப்பன்றி போன்ற விலங்குகளும் உள்ளன.

இந்த இடத்தைப்பாதுகாக்க திரு.பத்ரிநாத் 2012 ல் முயற்சி எடுத்தார். பின்னர் தமிழ்தாசன், கார்த்திகேயன், மணிகண்டன் முயற்சியால் இது காக்கப்பட வேண்டிய கிராம வனம் என்று அறிவிக்கப்படும் நிலைக்கு உயர்ந்துள்ளது. இங்குள்ள நீர்குட்டை கால்நடைகளுக்கு குடிநீராகப் பயன்படுகிறது.

இங்கு 28.03.2026 அன்று தொழுவம் அமைப்பின் ஸ்தாபகர் திரு. கபிலன் மூலம் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு இந்த நிலத்தை அரசு மக்கள் அனுமதியின்றி பிற பயன்பாட்டிற்கு பயன்படுத்தக் கூடாது என்று தீர்மானமிடப்பட்டது. இது வனம் போன்று மக்களால் பாதுகாக்கப்பட்ட பல்லுயிர் பன்மயக் காடு என்று அறிவிக்க ஏற்பாடு செய்யவும் அரசைக் கேட்டுக்கொள்ள முடிவு செய்யப்பட்டது.

மேலும் விவரங்களுக்கு

கார்த்திகேயன், இடையபட்டி. செல் : 9585732393

## ரமேசின் கால்நடை மூலிகை வைத்யம்

சிவகங்கை மாவட்டம். இளையான்குடி வட்டம். வேளாணி கிராமத்தை சேர்ந்த திரு. ரமேசுக்கு வயது 42. இவர் தனது தாய், தந்தை, மனைவி மற்றும் இரு மகள்களுடன் வசித்து வருகிறார். இவர் திருமணமாகி தனது மனைவியுடன் கோயமுத்தூரில் தனியார் நிறுவனமொன்றில் எலக்ட்ரீசியனாக பணியாற்றி வந்தார். 10 வருட காலம் கழித்த பிறகு தான் பார்க்கும் பணியில் நாட்டமின்றி தனது சொந்த ஊரான வேளாணிக்கி திரும்பினார். வேளாணியில் அவரது தந்தை 10 செம்மறி ஆடுகள் 3 மாடுகள் வைத்து பிழைப்பு நடத்தி வந்தார். தனது தந்தையின் கால்நடைகளை தனது மனைவியுடன் உதவியுடன் சேர்ந்து கவனிக்கத் தொடங்கினார். இதோடு மட்டும் நின்று விடாமல் தனது ஊரில் அழிவின் விளிம்பில் இருந்த பனைமரங்களை பல போராட்டங்களில் ஈடுபட்டு அவரது கிராமம் மற்றும் கிராமங்களைச் சுற்றிலும் உள்ள பல ஆயிரக்கணக்கான பனை மரங்களை மீட்டுள்ளார். 7 வருடங்களில் இவரது கால்நடைகளின் எண்ணிக்கை அதிகரித்தது. 30 உருப்படிகள் விற்று தன் தங்கையின் திருமணத்தை நடத்தினார். இவரது கிராமத்திற்கு போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தால் இவரது கால்நடைகளுக்கு ஏதேனும் நோய் ஏற்பட்டபின் கால்நடை மருத்துவர் தகுந்த நேரத்தில் வருவதில்லை. எனவே ரமேஷ் மற்றும் அவரது தந்தையும், தங்களது கால்நடைகளுக்கு தனது வயலைச் சுற்றிக் கிடைக்கும் மூலிகைகளை கொண்டு வைத்தியம் செய்து வருகின்றனர். தற்போது இவரது பண்ணையில் 40 ஆடுகள் மற்றும் 10 மாடுகள் உள்ளன. ரமேஷ் தனது பண்ணையில் கால்நடைகளுக்குத் தேவையான மூலிகைச் செடிகளை வளர்த்து வருகிறார். மேலும் தன் குடும்பத்திற்குத் தேவையான காய்கறிகளை பயிரிட்டுள்ளார். இந்த பயிர்களுக்கு மாதம் ஒரு முறை மீன் அமிலம் தயார் செய்து தெளித்து வருகிறார். ரமேஷ் தனது கால்நடைகளுக்கு கழுத்து மணி ஒன்றை உருவாக்கியுள்ளார். இந்த மணி ஒவ்வொரு ஆட்டின் கழுத்திலும் மழைக்காலங்களில் கட்டித் தொங்கவிடப்படும். இந்த மணியின் உள்ளே 20 மிளகு, சிறிதளவு கல் உப்பும் வைக்கப்பட்டிருக்கும். தனது கால்நடைகள் மேயப் போகும் இடத்தில் ஏதேனும் நோய் ஏற்பட்டால் அப்பொழுது இந்த இடத்தில் கிடைக்கும் ஏதேனும் ஒரு மூலிகையுடன் ஆட்டின் கழுத்தில் மிளகு, உப்பையும் இடித்துக் கொடுப்பார். இதனால் அந்த ஆடு சிறிது நேரத்தில் குணமடையும். இவரது வைத்திய முறைகள் பின்வருமாறு.

**காணைக்கு**

ஆடு, மாட்டிற்கு கானை வந்த முதல் நாள் சிறியாநங்கை இலை 10, வெற்றிலை 10, கல் உப்பு சிறிதளவு இவற்றை இடித்து நாக்கில் தடவ வேண்டும். 2வது நாள் 10 வெற்றிலை, 20 மிளகு, கல் உப்பு மூன்றையும் இடித்து துவையல் பதத்தில் நாக்கில் தடவ வேண்டும். இதனை வெறும் வயிற்றில் காலையில் உள்ளே கொடுக்க 5 நாளில் காணை குணமாகும்.

**அம்மைக்கு**

தேங்காய் 1 மூடி, நாட்டுச் சர்க்கரை 50 கிராம், மஞ்சள் தூள் 50 கிராம், சின்ன வெங்காயம் 10, வேப்பிலை 2 கைப்பிடி 2 ஸ்பூன் சீரகம் சேர்த்து அரைத்து உருண்டையாக ஒரு வாரம் காலையில் உள்ளே கொடுக்க வேண்டும்.

**வெளிப்பூச்சி**

மஞ்சள் 50 கிராம், வேப்பிலை 2 கைப்பிடி, பச்சைக் கற்பூரம் 20 கிராம், இவற்றை மையாக அரைத்து புண்ணில் பூச வேண்டும்.

**கால் உடைந்தால்**

ஆடு, மாட்டிற்கு கால் ஒடிந்தால் ஒடி முறிவு இலை, திரி கடுகு இலையை அரைத்து சிறிது பச்சரிசி மாவு கலந்து முறிவு ஏற்பட்ட இடத்தில் பத்துப் போட்டு காட்டன் துணியால் சுத்திக் கட்ட வேண்டும். பின்பு ஒரு வாரம் கழித்து கட்டை அவிழ்த்து இது போன்றே மறு கட்டு போட்டால் 2 கட்டுடன் முறிவு குணமாகும்.

**விஷம் தீண்டினால்**

ஆடு மாட்டிற்கு விஷம் தீண்டினாலா அல்லது வேறு ஏதாவது காரணங்களால் நாடித்துடிப்பு இல்லாமல் காணப்பட்டால் முதலுதவியாக வேலிப்பருத்தி இலை மற்றும் 10 மிளகு இரண்டையும் ஒன்றாக இடித்து ஆடு மாட்டின் நாக்கில் தடவினால் சிறிது நேரத்தில் விஷ முறிவு ஏற்பட்டு நாடி துடிப்பு உண்டாகும் அதன் பிறகு நாம் வைத்தியாரிடம் செல்லலாம்.

**கழிச்சலுக்கு**

நவா கொழுந்து ஒரு கைப்பிடி, ஒரளிசெடி 1 கைப்பிடி,ஆவாரம் மொட்டு 1 கைப்பிடி மூன்றையும் அரைத்து உருண்டையாக 2 வேளை கொடுக்க கழிச்சல் நிற்கும். ஆனைநெருஞ்சி இலையை 1/2 லிட்டர் நீராகாரத்தில் கரைத்து 2 வேளை உள்ளே கொடுக்க கழிச்சல் குணமாகும். ஒரு லிட்டர் நல்லெண்ணெயில் 2 கைப்பிடி மருதாணி, 2 கைப்பிடி வேப்பங்கொழுந்து சேர்த்து நன்றாக காய்ச்சி அதனை காணைபுண், அம்மை புண் போன்ற ஆறாத புண்களில் போட்டால் புண் குணமாகும் .

**வயிறு உப்பிசம்**

வயிறு உப்பிசம் மற்றும் செரியாமை ஏற்பட்டால் மஞ்சணத்தி இலையை சாப்பிடக் கொடுத்தால் செரியாமை வயிறு உப்பிசம் குணமாகும். மேலும் ஆடு மாடு மேய்ச்சலின் போது அடிபட்டு ஊமைக்காயம் ஏற்பட்டாலும் நுணா இலையை சாப்பிடக் கொடுத்தால் உள்காயம் குணமாகும்.

மேலும் இரண்டு ஆடுகள் மற்றும் மாடுகள் ஒன்றொடு ஒன்று இடித்துக் கொண்டலோ அல்லது மோதிக் கொண்டாலோ உள் காயம் உண்டாகும். அதனால் மாடு அல்லது ஆடு சோர்ந்து காணப்படும். இந்த சமயம் மனித சிறுநீர் எடுத்து அந்த ஆடு மாட்டிற்கு உடனே கொடுக்க உள்காயம் குணமாகும்.

**நீல நாக்கு நோய்**

ஒரு கைபிடி சிறியாநங்கை இலையுடன் சிறிது கல் உப்பு சேர்த்து வடித்து 1 வாரம் நாக்கில் தடவி வர நீல நாக்கு நோய் குணமாகும். இதற்கு (மிளகு சேர்க்க கூடாது). காலை மாலை சுத்தமான மஞ்சள் தூள் அல்லது மஞ்சள் 50 கிராம் இடித்து 100 மி.லி தண்ணீரில் கரைத்து 3 நாள் உள்ளே கொடுக்க வேண்டும்.

**மாட்டுக் கரணை அல்லது மண்டை வீக்கம்**

இது இளம் மாட்டிற்கு மட்டுமே வரும். இதற்கு 50 கிராம் வெந்தயம் ஊற வைத்து அரைத்து தண்ணியாக கரைத்து வெறும் வயிற்றில் 3 நாள் உள்ளே கொடுக்க வேண்டும்.

**காய்ச்சலுக்கு**

நுணா இலை மற்றும் தலைச்சுருளி வேர் சாப்பிடக் கொடுத்தால் காய்ச்சல் குணமாகும்.

**குழந்தைகள் மற்றும் பெரியவர்களின் தொடர் சளிக்கு**

குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கு தீராத தொடர் சளி இருந்தால் இரவு தூங்கும் முன் உள்ளங்கை பெரு விரலின் கீழ் உள்ள கனமான பகுதியில் தூதுவளை இலை 5 எடுத்துக் கையில் வைத்து காட்டான் துணியை கொண்டு சுற்றிக் கட்ட வேண்டும். பின்பு காலையில் அவிழ்ந்து விட வேண்டும். இவ்வாறு 30 நாள் செய்தால் சளி முற்றிலும் குணமாகும்.

ரமேஷ், வேளாணி, இளையான்குடி, சிவகங்கை
செல் : 9789135494

**உதயகுமாரியின் கால்நடை வைத்யம்**

எனது பெயர் உதயகுமாரி. நான் திருவாரூர் மாவட்டம் ஜாம்புவானோடை கிராமம் 2019 ம் ஆண்டு தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவசமுத்திரம் சுனாமிக்கு பின் நிலைத்த வாழ்வாதார திட்டம் மூலம் கால்நடைகளுக்கான மூலிகை வைத்திய பயிற்சி எனக்கு அளித்தார்கள். சேவா நிறுவனம், மதுரை மகளிர் சுய உதவிகுழு மூலமாக நான் பயிற்சிக்கு சென்றேன். 10 நாள் பயிற்சி நடைபெறும் போதே எங்கள் ஊரில் ஒரு மாட்டுக்கு ரொம்ப முடியவில்லை. அந்த மாடு இறக்கும் நிலையில் இருந்தது. மூன்று நாள் நீர், சாணம் போகவில்லை. ஏற்கனவே 11 மாத கன்று இறந்து உள்ளது என்று கூறினார்கள். நான் பயிற்சி எடுத்த முறையில் மூலிகை வைத்தியம்

செய்தேன். உடனடியாக 1/2 மணி நேரத்தில் நீர் பிரிந்தது, சாணம் இட்டது, அதன் பிறகு எனக்கும் நம்பிகை வந்தது. அவர்கள் சந்தோஷப்பட்டார்கள். அதன் பிறகு மாடும் கன்றும் இன்றும் நல்ல முறையில் உள்ளது. நானும் 10 நாள் பயிற்சி முடித்தேன். அதன் பிறகு பாண்டிச்சேரி ஆரோவில் பயிற்சிக்குச் சென்றேன். பயிற்சியாளர் கூட நானும் பயிற்சிக்குச் சென்றேன். பிறகு பயிற்சியாளராகி பயிற்சி அளித்தேன். அது மட்டும் இல்லாமல், மசால் உருண்டை, மத்தான் தைலம், குடற்புழு நீக்க மருந்து, தயாரித்துக் கொடுத்து வருகிறேன். எனக்கும் என் குடும்பத்துக்கும், நல்ல வருமானம் பெற்று வருகிறேன். எங்கள் ஊரில் கால்நடைகளுக்கு முடியவில்லை என்றால் நான் மூலிகை வைத்யம் பார்ப்பேன். போன் மூலம் தகவல் சொல்வேன். நல்ல பலன் கிடைக்கும். மாவட்ட அளவில் பயிற்சியாளர்கள் பயிற்சிஅளிப்போம். சேவா விவேகானந்தன் ஐயா மூலமாக பயிற்சி பெற்றுள்ளோம். நல்ல வருமானமும் வருகிறது. எங்களுக்கும், மக்களுக்கும் பயன்னுள்ளதாக இருக்கிறது.

உதயகுமாரி
ஜாம்புவானோடை கிராமம்
திருவாரூர் மாவட்டம் செல் : 9751201736

## அம்மை கொப்பளம் வந்த மாடுகளுக்கு

அறிகுறிகள்: ஆரம்பத்தில் மாடுகளின் வயிற்றுப் பகுதியில் கீழ்வாட்டில் தண்ணீர் கொப்பளம் போல உருவாகும். பின்பு உடல் முழுவதும் காணப்படும். மாடுகள் தீனி எடுக்காது. காய்ச்சல் இருக்கும். கண்ணில் இருந்து நீர் வடிந்து கொண்டே இருக்கும். கொப்பளங்களிலிருந்தும் நீர் வடியும்.

காரணம்: எளிதில் கிருமிகளால் ஏற்படுகிறது.

வைத்திய முறை: 1 – உள் மருந்து:

வேப்பங்கொழுந்து, துளசி, சிறியாநங்கை, மஞ்சள் தூள், வெந்தயம், பேய்மிரட்டி (பெருந்தும்பை) இவை ஒவ்வொன்றும் வகை 50 கிராம் வீதம் எடுத்துக் கொள்ளவும், இதோடு மிளகு (10 கிராம்) சேர்த்து சேர்த்தரைத்து உருண்டையாக உருட்டிக் கொள்ளவும். பின்பு இதை கால் லிட்டர் தேங்காய்ப்பாலில் கலந்து, இரண்டு வேளை வீதம் மூன்று அல்லது ஐந்து நாட்கள் மாட்டின் உள்ளே கொடுக்க வேண்டும்.

2 . வெளி மருந்து:

1) வெப்பாலை இலைகளை அரை லிட்டர் தேங்காய் எண்ணெயில் கலந்து ஐந்து முதல் ஏழு நாட்கள் வெயிலில் வைத்து மேல் பூச்சாக பூசி வரவும்.

2) கைப்பிடி அளவு துளசி, குப்பைமேனி எடுத்து இதோடு 5 பூண்டு பற்கள், ஒரு கரண்டி மஞ்சள் தூள் சேர்த்து அரைத்து, 100 மில்லி நல்லெண்ணெய் சேர்த்து காய்த்து, ஆறியபின் மேல் பூச்சாக பூசி வரவும்.

அய்யாத்துரைக்கோனார்,

## பெரிய அம்மை நோய் (எல். எஸ்.டி) வந்த மாடுகளுக்கு

அறிகுறிகள்: மாடுகளுக்கு கொப்பளம், சிறு கட்டிகளாக உடல் முழுவதும் காணப்படும்.

நோய் காரணம்: வைரஸ் கிருமிகளால் கொசுக்கள், ஈக்கள், உண்ணி போன்றவை மூலமாக பரவுகிறது.

வைத்தியம்: 1. உள் மருந்து:

மூலிகை மசால் உருண்டை:

மாடுகளுக்கு மூலிகை மசால் உருண்டையை கொடுக்க வேண்டும். இதனை தயாரிக்கத் தேவையான மூலிகை மற்றும் கடைச்சரக்கு பொருட்கள் (5 மாடுகளுக்கு போதுமானது) கீழே கொடுக்கப்பட்டுள்ளன: மிளகு – 10 கிராம், சீரகம்– 10 கிராம், கொத்தமல்லி விதை – 20 கிராம், வெந்தயம்– 10 கிராம், ஓமம்– 10 கிராம், சுக்கு– 50 கிராம், கொம்பு மஞ்சள் – 50 கிராம், சோற்றுக் கற்றாழை – 100 கிராம், சீந்தில் என்ற அமிர்தவள்ளி, (இலை, தண்டு ) – 100 கிராம், வெள்ளைப்பூண்டு– 50 கிராம், மிளகாய் வத்தல்–50 கிராம், வெற்றிலை (இலை எண்ணிக்கை)– 10, கறிவேப்பிலை– 100 கிராம், துளசி இலை – 50 கிராம், ஆவாரம் (இலை மற்றும் பூக்கள்) – 100 கிராம், வேப்பிலை– 100 கிராம், கொய்யாக்கொழுந்து – 100 கிராம், தேங்காய்த்துருவல் – 100 கிராம், வெல்லம் – 100 கிராம், கல் உப்பு – 50 கிராம் சமையல் சோடா (ஆப்பசோடா)– 100 கிராம் .

மூலிகை மசால் உருண்டை தயாரிக்கும் முறை :

முதலில் கடைசரக்குப் பொருட்களான மிளகு, சீரகம், கொத்தமல்லி, வெந்தயம், ஓமம், சுக்கு, கொம்பு மஞ்சள், மிளகாய் வத்தல் ஆகியவற்றை இடித்து ஒரு மிக்ஸியில் இட்டு தூள் செய்ய வேண்டும்.

புதிதாக கொண்டு வந்த தாவரப் பொருட்களான சோற்றுக்கற்றாழை, கறிவேப்பிலை, வேப்பிலை,

கொய்யாக்கொழுந்து, தேங்காய், துளசி, வெள்ளைப் பூண்டு, சீந்தில், ஆவாரை ஆகியவற்றை இடித்து அரைத்து வைத்துக் கொள்ள வேண்டும்.
முதலில் தயாரிக்கப்பட்ட கடைச்சரக்கு தூளையும், இரண்டாவதாக இடித்து அரைத்து எடுத்துக் கொண்ட மூலிகை கலவையையும் சேர்க்க வேண்டும். இத்துடன் தூள் செய்யப்பட்ட வெல்லம், கல் உப்பு மற்றும் ஆப்ப சோடாவையும் நன்றாக கலந்து உருண்டை பிடித்து (எலுமிச்சை பழம் அளவு சுமார் 70 கிராம்) மஞ்சள் தூளில் உருட்டி எடுக்க வேண்டும்.
மூலிகை மசால் மருந்து உருண்டையை மாடுகளுக்கு வழங்கும் அளவும் முறையும் வளர்ந்த மாடுகளுக்கு ஓர் உருண்டை வாய் வழியே உள்ளே புகட்ட வேண்டும்.
கன்றுக்குட்டிகளுக்கு மூலிகைமசால் உருண்டையினை பாதி அளவாக 30 கிராம் கொடுக்க வேண்டும். இதனை தினமும் காலை வேளையில் மூன்று நாட்கள் கொடுக்க வேண்டும்.
வெளி மருந்து: மத்தான் தைலத்தை உடம்பு முழுவதும் தடவவும். மத்தான் தைலம் தயாரிக்க 500 மில்லி தேங்காய் எண்ணெயில் 250 மில்லி ஊமத்தை இலை சாறு விட்டு சுமார் 1 மணி நேரம் பதம் வரும் வரை காய்ச்ச வேண்டும். காய்ச்சி இறக்கியபின் ஐந்து கிராம் மயில் துத்தம் சேர்த்து கிளற வேண்டும். இதனை பாட்டிலில் ஊற்றி வைத்துக் கொண்டு தேவைப்படும்போது புண்கள், தோல், பத்து போன்றவற்றிற்கு மேல் பூச்சாக பூசவும். அல்லது கைப்பிடி அளவு துளசி, குப்பைமேனி எடுத்து இதோடு 5 பூண்டு பற்கள், ஒரு கரண்டி மஞ்சள் தூள் சேர்த்து அரைத்து, 100 மில்லி நல்லெண்ணெய் சேர்த்து காய்ச்சி ஆறிய பின் மேல் பூச்சாக பூசி வரவும்.
–பார்வதி, நடுக்குப்பம், மரக்காணம், விழுப்புரம் மாவட்டம்.

## கன்னியாகுமரியில் ஓர் உறுதிமொழி

இந்திய துணைக்கண்டத்தில் கிராம மக்கள் குறிப்பாக ஏழை, எளியவர்கள் கால்நடை வளர்ப்பை பிரதானத் தொழிலாகக் கொண்டுள்ளனர். இவர்களின் வாழ்வாதாரமாகத் திகழும் கால்நடைகளை பொதுஇடங்கள், மலைப்பகுதிகளில் ஓட்டி மேய்த்து வருகின்றனர். இந்து பொது இடங்கள், குறிப்பாக மேய்ச்சல் நிலங்கள், கண்மாய், குளங்கள், ஏரிகள் ஆக்கிரமிப்பு மற்றும் பிற திட்டங்களுக்கு பயன்படுத்தப்பட்டு வருவதால் குறைவான பூமியே மிஞ்சியுள்ளது. இதையும் பாதுகாத்து, ஆக்கிரமிப்புகளை அகற்றி மேய்ச்சல் சமூக மக்களுக்கு உத்திரவாதம் அளிக்கும் ஓர் உறுதி மொழியை 1.1.2026 அன்று கன்னியாகுமாரி அருகேயுள்ள ரஸ்தகாடு இடத்தில் பலரும் சேர்ந்து எடுக்கப்பட்டது. 2026 ஐ உலக மேய்ச்சல் நிலம் மற்றும் கிடைக்காரர்கள் ஆண்டாக ஐ.நா.சபை அறிவித்தது. இதனை ஓர் வாய்ப்பாகவும் பயன்படுத்தி கொண்டாடப்பட்டது. சேவா விவேகானந்தன், தமிழ்நாடு மேய்ச்சல்காரர்கள் கூட்டமைப்புத் தலைவர் இராஜீவ்காந்தி, தென் மாவட்ட விவசாய சங்க தலைவர் திரு அர்சுணன், கிடைக்காரர்கள், தொண்டு நிறுவனப் பணியாளர்கள் கலந்து கொண்ட உறுதிமொழி எடுக்கப்பட்டது.
காப்போம் காப்போம். மேய்ச்சல் நிலங்களை காப்போம், பெறுவோம் பெறுவோம் வனமேய்ச்சல் உரிமையைபெறுவோம்.
இதற்குப் பின்னர் தெற்க கள்ளிகுளம் கிராமத்தில் மேய்ச்சல் சமூக மக்களின் குழுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தை திரு. பக்சிராஜன் ஏற்பாடு செய்திருந்தார்.

## மலையில் மாடு மேய்ப்பதால் யானைகள் தொல்லை குறையும்

நான் கடந்த 40 ஆண்டுகளாக கிடை மாடுகள் வைத்து மேய்த்து வருகின்றேன். என்னிடம் 70 மாடுகள் உள்ளன. மலையில் மாடுகள் புல்களைமேய்வதால் புதுத்தளிர் தழைக்கும். இந்த தளிரை யானைகள் விரும்பி தின்னும். இந்த காரணத்தினால் யானைகள் மலைகளில் மேய்ந்து விடும். கீழே கிராமங்களுக்கு வருவது குறைந்துவிடும்.
மாடசாமி, பழங்குடி கிராமம், வள்ளியூர் வழி , திருநெல்வேலி மாவட்டம். செல் : 9942006918

## யானைகள் கிராமத்திற்கு வருவதை தடுக்க

நான் 10 வருடங்களுக்கு மேலாக வனத்தில் எருமை மாடுகள் 35 பராமரித்து மேய்த்து வந்தேன். இந்த சமயத்தில் யானை வந்து விட்டால் எல்லா எருமைகளும் ஒன்று சேர்ந்து யானையை விரட்டி விடும். யானைகளும் கிழே இறங்கி கிராமங்களுக்கு வருவது நின்று விடும். ஆனால் வனத்துறையினர் இந்த உண்மையை புரிந்து கொள்ளாமல் வனத்தில்

மேய்க்க அனுமதி மறுத்து விட்டனர். இதனால் எருமை மாடுகளை விற்று விட்டு பசு மாடுகள் கிராமங்களில் மேய்த்து வருகிறேன். எங்கள் பகுதியில் விவசாயிகள் களைகளை கட்டுப்படுத்த களைக்கொல்லிகளை பயன்படுத்தி வருகின்றனர். இது குளங்களுக்கு பரவி சுத்தமான தண்ணீரை பாழாக்கி விடுகிறது. இதனால் மேய்ச்சல் பிரச்சனை உண்டாகி மாடுகள் நோய் வாய்ப்படுகின்றன. எங்கள் மேய்ச்சல் தொழில் பாதிப்பு அடைகிறது.

சரோஜா, கேசவனேரி, கன்னியாகுமரி மாவட்டம்

**புலிக்குளம் கிடைமாடு வளர்ப்போர் கூட்டம்**

7.3.2026 அன்று சிவகங்கை மாவட்டம், மானாமதுரை, புலிக்குளம் மாடு ஆராய்ச்சி நிலையத்தில் புலிக்குளம் கிடைக்காரர்களின் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சிவகங்கை, மதுரை மாவட்டங்களிலிருந்து கிடைமாடு வளர்ப்போர் கலந்து கொண்டனர். தமிழ்நாடு கால்நடை பல்கலைகழக இயக்குநர் (கால்நடை உற்பத்தி ஆய்வு) எம். முருகன் சிறப்புரை ஆற்றினார். புலிக்குளம் ஆராய்ச்சி நிலைய தலைவர் திரு. வி. பழனிச்சாமி, வரவேற்புரை செய்து புலிக்குளம் மாட்டு இன மேம்பாட்டு திட்டத்தை எடுத்துரைத்தார். சேவா விவேகானந்தன் புலிக்குளம் மாட்டு இனத்தை 2012ல் பதிவு செய்த விவரத்தை எடுத்துக் கூறினார். மாவட்ட அளவில் புலிக்குளம் மாடு வளர்ப்போர் சங்க அமைப்பையும் வன உரிமை சட்டம் மூலம் மலையில் மாடு மேய்க்கும் உரிமையைப் பெற்றுத் தர ஏற்பாடுகள் செய்வதை எடுத்துரைத்தார். சங்கத்தில் சேரும் உறுப்பினர்கள் வருடத்தில் மாசி, வைகாசி, ஆவணி மாதங்களில் கூட வேண்டும். நுழைவுக்கட்டணம் ரூ. 500ம் வருடசந்தா தொகை ரூ. 500ம் செலுத்த வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. புலிக்குளம் மாடுகளுக்கு முக்கிய நோய்களாக கால்காணை, வாய்க்காணை நோய் வருகின்றது. இந்த நோய் வந்த பின் கரணை என்ற தோல் நோயும் வந்து பாதிக்கின்றது. கரணை நோய் வந்த சமயம் மழை பெய்யாமல் வெப்பம் நீடித்தால் நோயின் தாக்கம் கூடி பாதிக்கப்படும். மழை பெய்து சூடு தனிந்துவிட்டால் இந்த நோயிலிருந்து நிவாரணம் கிடைக்கும். இந்த நோய் வந்த மாடுகளுக்கு வெந்தயம் ஊற வைத்து ஆட்டி உள்ளுக்குத் தர சூடு தணியும். பெரியம்மை நோயும் நாட்டு மாடுகளுக்கு வருவதுண்டு. புலிக்குளம் மாடுகள் எந்தெந்த மாதங்களில் எங்கு மேய்கின்றன என்ற மாடுகள் செல்லும் வலசைப் பாதை பற்றிய வரைபடம் தயார் செய்யப்பட்டு வெளியிடப்பட்டது. இதை புலிக்குளம் மாடு வளர்ப்போர் சங்கத் தலைவர் மானங்காத்தான் திரு. இராமகிருஷ்ணன் தயாரிக்க உதவி செய்தார். புலிக்குளம் மாடு பராமரிப்பில் கிடைக்காரர்கள் கூறிய முக்கியமானவை பின் வருமாறு:

1. மானாமதுரை மீனாட்சிபுரம் கிராமத்தில் புறம்போக்கு நிலத்தில் குளம் வெட்டி வைகை ஆற்றிலிருந்து நீர் வரவழைத்து பெருக்க வேண்டும். இது மாடுகளின் குடிநீர் சேவைக்கு போதுமானது.
2. கட்டிக்குளம் கிராமத்தில் கண்மாயை ஒட்டியுள்ள புறம்போக்கு நிலம் ஆக்கிரமிப்பில் உள்ளது. இந்த ஆக்கிரமிப்பு அகற்றப்பட வேண்டும்.
3. சிவகங்கை மாவட்டத்தில் பல இடங்களில் வனத்துறை மூலம் யூக்கலிப்டஸ் என்ற தைலமரம் நடப்பட்டுள்ளது. இதில் உள்ளே சென்று மேய்ப்பதற்கு வன உரிமைச்சட்டம் வகை செய்வதால் இதற்கான நடைமுறை செயல்படுத்த வேண்டும்.
4. புலிக்குளம் கிடை மாட்டுக்காரர்களுக்கு ஸ்மார்ட்கார்டு என்ற சிறப்பு அடையாள அட்டை வழங்கப்பட்டு இவர்கள் இடம் விட்டு இடம் செல்லும் சமயம் ஏற்படும் பிரச்சனைகள், கொடுமைகள் முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டும்.
5. கிராமப் பொது நிலங்களில் காணப்படும் சீமைக்கருவேல மரங்கள் அகற்றப்பட வேண்டும்.

இராஜீவ்காந்தி,
தமிழ்நாடு மேய்ச்சல் சமூகக்கூட்டமைப்பு
காளையார்கோவில். சிவகங்கை மாவட்டம்
செல் : 9677517899

**சொட்டுநீர்பாசனம், தெளிப்பான் நீர்பாசன குழாய் பதிக்க**

தமிழ்நாடு அரசு மூலம் மானியம் பெறும் திட்டத்தில் தரப்படும் கருவிகளை விட நாங்கள் மானியமில்லாமல் விலைக்கு தரப்படும் பொருட்கள் 10 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து உழைக்கும். மண்ணில் 11/2 அடி ஆழத்தில் பி.வி.சி பைப் பதித்து பின் பிளக்ஸிபில் ஹோஸ் சிறிய பைப் இணைத்து மரங்களுக்கு அருகில் நீர் விழுமாறு செய்கிறோம். நாங்களே தங்கள் நிலத்திற்கு வந்து பதித்து இயக்கித் தருகிறோம்.

ராஜரத்தினம், சொட்டுநீர்பாசன நிறுவனம், ஆர்.ஆர். டெக், 4/260, அய்யனார் நகர், எம்.ஐ.இ.டி. குண்டூர், திருச்சி – 620007, செல்: 7339663281

## நம்வழி வேளாண்மைக்கு சந்தா விவரம் ;

| | வருட சந்தா ரூபாய் | ஆயுள் சந்தா ரூபாய் ; |
|---|---|---|
| நூலகங்கள் / நிறுவனங்கள் / கல்லூரிகள்/ கம்பெனிகள் | 300 | 2500 |
| விவசாயிகள் / தனிநபர்கள் | 200 | 2000 |
| தனிப்பிரதி | 40 | ---- |
| 10 வருட பிரதிகளின் தொகுப்பு (பைண்டிங் செய்தது ரூ. 1500) + ( கொரியர் செலவு ரூ. 300 ) | 1800 | ---- |

சந்தா தொகை மணியார்டர் அல்லது பாங்க் டிராப் மூலம் ‘‘சேவா’’ மதுரை என்ற பெயரில் எடுத்துக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

வங்கியின் பெயர் –யூனியன் பேங்க் ஆப் இந்தியா
மதுரை – கோச்சடை கிளை
SB A/C No – 493902010004241
IFSC Code : UBIN0549398

சேவா
45, டி.பி.எம் நகர், விராட்டிபத்து
மதுரை – 625016
தொலைபேசி : 0452–2380082 , செல்–9344523892

Printed by A. Palaniappan at
Vivekananda Press
G-4, Industrial Estate, Madurai - 7

நூல் அஞ்சல்

பெறுநர்

------------------------------------
------------------------------------
------------------------------------
------------------------------------

Published and Edited by
P. Vivekanandan on behalf of
SEVA
45. T.P.M. Nagar, 3rd Street
Virattipathu
Madurai - 625 016
(0452) 2380 082, 9344523892
Email : vivekseva@gmail.com
website : www.sevango.in